JAFFNA HINDU LADIES' COLLEGE

It Ought to be beautiful I live here

# சக்தி 2003





யாழ்ப்பாணம் இந்துமகளிர் பழைய மாணவிகள் சங்கம் - கனடா

JAFFNA HINDU LADIES' OLD GIRLS' ASSOCIATION - CANADA

மணிவிழாக்காணும் என் கல்லூரித்தாய்க்கு

வாழ்த்துக்கள்

*With Best wishes from*

**Dr. Yasho Tharmaratnam**
Family Doctor
2466 Eglinton Avenue East, Unit 3,
Scarborough, ON M1K 5J8 Tel: (416) 266-7786

யாழ் இந்து மகளிர் கல்லூரியின்

*மணிவிழாவினை* யொட்டி


யாழ்ப்பாணம் இந்துமகளிர்

பழைய மாணவிகள் சங்கம் - கனடா

பெருமையுடன் வழங்கும் கலைவிழா

# சக்தி 2003

*செப்டம்பர் 20, சனிக்கிழமை*
*மாலை 5:30 மணி*



இடம்

சேர் ஜோன் மக்டொனால்ட் கல்லூரி அரங்கம்

**Sir John A MacDonald Collegiate Institute**

2300 Pharmacy Avenue, Scarborough

(Finch / Pharmacy)

# யாழ். இந்து மகளிர் கல்லூரிப் பழைய மாணவர் சங்கம், ஒன்ராரியோ, கனடா

## கல்லூரிக் கீதம்

திருமிகு மெங்கள் யாழ்நகர்க் கணியாய்த்
திகழ்ந்திடுங் கல்லூரி - எங்கள்
பெரு வரு மிந்துப் பெண்களுக்கொளியாய்ப்
பிறங்கிடுங் கல்லூரி - உயர்
மருவுறு கலைகள் யாவையு மின்பாய்
வழங்கிடுங் கல்லூரி - உனைப்
பெருகிடும் அன்பால் புந்தியில் வைத்துன்
புகழினை வாழ்த்தோமோ- உனை
வந்தே மாதரம் வந்தே மாதரம்
என்று வணங்கோமோ.

இந்து மதப் புகழ் எங்கும் விளங்கிட
இசைந்திடுங் கல்லூரி- இயல்
சிந்தை வளம் பெற மெய்ப்பொருளறிவைச்
சேர்த்திடுங் கல்லூரி — வளர்
செந்தமிழ் ஆங்கில வடமொழி அறிவைச்
சுரந்திடுங் கல்லூரி - உனை
வந்தனை செய்து பைந்தமிழ் மாலை
வாழ்த் தொடுசூ டோமோ உனை
வந்தே மாதரம் வந்தே மாதரம்
என்று வணங்கோமோ.

மங்கையர் மாண்பை மன்பதை அறிய
முழங்கிடுங் கல்லூரி -ஒளி
பொங்குயர் அறிவுச் சுடரினை யுளத்திற்
பொறித்திடுங் கல்லூரி- இந்து
நங்கையர் வாழ்வின் லட்சியமனைத்தும்
நல்கிடுங் கல்லூரி - உனை
அங்கையில் மலர்கொண் டன்புடன் பாடி
அனுதினம் ஏத்தோமோ- உனை
வந்தே மாதரம் வந்தே மாதரம்
என்று வணங்கோமோ

கலைமகள் உலவக் களிநடம் புரியக்
கண்டிடுங் கல்லூரி -என்றும்
மலைமகள் கொழுநன் மலரடிபோற்றி
மாண்புறுங் கல்லூரி - நித்தம்
நிலமகள் நெற்றித் திலகமென் றேத்த
நிலைத்திடுங் கல்லூரி- உனைத்
தலைமுறையாகத் தொழு துளங் குளிரத்
துதி சொல்லிப் பாடோமோ- உனை
வந்தே மாதரம் வந்தே மாதரம்
என்று வணங்கோமோ.

## நிர்வாகக் குழு

**போஷகர்** செல்வி நல்லம்மா குழந்தைவேலு
**தலைவர்** திருமதி சரஸ்வதி ஞானசம்பந்தன்
**உபதலைவர்** திருமதி யசோ சிவாநந்தசுந்தரம்
**செயலாளர்** திருமதி. ஸ்ரீகாந்தி சதாசிவம்
**உபசெயலாளர்** திருமதி ஜெயகௌரி மகிந்தன்
**பொருளாளர்** திருமதி கௌசல்யா சிவகுமார்

### குழுவின் உப உறுப்பினர்கள்

திருமதி. இராஜேஸ்வரி சண்முகம் (ஆலோசகர்)
திருமதி பரமேஸ்வரி பரமநாதன் (ஆலோசகர்)
திருமதி மலர் சிதம்பரப்பிள்ளை
திருமதி பரமேஸ்வரி செல்வராஜா
திருமதி நீலா நகுலேசபிள்ளை
திருமதி மலர்விழி இராமகிருஷ்ணன்
திருமதி நந்தினி சிவலிங்கம்
திருமதி தனுஜா ரோமேஸ்
திருமதி திருநங்கை ஞானசபேசன்
திருமதி திருமகள் உமாசங்கர்
திருமதி சத்தியபாமா ஆறுமுகராஜா
திருமதி சுமதி ரூபன்
திருமதி பாலேஸ்வரி கனகசபாபதி
திருமதி லட்சுமி வைத்தியநாதன்
திருமதி ஜெயமகாராணி சிவநாதன்
திருமதி சிவச்செல்வி சிவநேசன்
திருமதி ரஞ்சி செல்வராஜா
திருமதி தேவகி முனீஸ்வரராஜா.
திருமதி சதாமதி அருந்தவராஜா
திருமதி நாகபூசணி சுப்பிரமணியம்

### மலர்க் குழு

திருமதி செல்வமலர் சிதம்பரப்பிள்ளை
திருமதி சரஸ்வதி ஞானசம்பந்தன்
திருமதி நீலா நகுலேசபிள்ளை
திருமதி லோகநாயகி அருளலிங்கம்
செல்வி நல்லம்மா குழந்தைவேலு
திருமதி திருநங்கை ஞானசம்பந்தன்
திருமதி கௌசல்யா சிவகுமார்



## வரவேற்புரை மாலை

அன்பு நெஞ்சங்களே வருக!
தங்கள் நயனங்களைத் திருப்பி
எங்கள் மணிவிழாக் காணச் செலவிடுக!
எங்கள் நெஞ்சங்கள் மலர
தங்கள் வருகையைத் தவறாது தருக!
நிறை மனத்தோடு வருக வருக
என்று இருகரம் இணைத்து
இனிது வரவேற்கின்றோம்.

மணிவிழா ஓசை நம் செவிவாயில்களில் ஒலிக்கட்டும்.
வருக! வருக! வருக!

மலர்ந்து வரவேற்கும் இந்து
மகளிர் கல்லூரி
பழைய மாணவிகள் சங்கம் கனடா

# CANADA'S NATIONAL ANTHEM

**O Canada! Our home and native land!
True patriot love in all thy sons command.
With glowing hearts we see thee rise,
The True North strong and free!
From far and wide, O Canada,
We stand on Guard for thee.
God keep our land glorious and free!
O Canada, we stand on guard for thee.
O Canada, we stand on guard for thee.**

# தமிழ்த்தாய் வணக்கம்

வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி
வாழிய வாழியவே
வானம் அளந்த தனைத்தும் அளந்திடும்
வண் மொழி வாழியவே
ஏழ்கடல் வைப்பினும் தன் மணம் வீசி
இசை கொண்டு வாழியவே
எங்கள் தமிழ் மொழி எங்கள் தமிழ்மொழி
என்றென்றும் வாழியவே
சூழ்கலி நீங்கத் தமிழ்மொழி ஓங்கத்
துலங்குக வையகமே
தொல்லை வினை தரு தொல்லை அகன்று
சுடர்க தமிழ் நாடே
வாழ்க தமிழ்மொழி வாழ்க தமிழ்மொழி
வாழ்க தமிழ் மொழியே
வானம் அளந்த தனைத்தும் அறிந்து
வளர் மொழி வாழியவே.



உ
சிவமயம்



# ஸ்ரீ வரசித்தி விநாயகர் தேவஸ்தானம்

இடம் 3025, கென்னடி றோட், யூனிட் இல-10, ஸ்காபரோ
**No-3025, Kennedy Road, Unit-#10. Scarborough. ON (Finch & Kennedy, North of Finch) M1V 1S3**
தொலைபேசி/Phone – (416) 291-8500

யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியின் கனடாக் கிளை பழைய மாணவிகள் சங்கத்தினரால் 2ஆவது தடவையாக நடாத்தப்படும் மாபெரும் கலைவிழா சிறப்பாக நடைபெற இறையருளை வேண்டிக் கொண்டு வடமாகாணத்தின் மகளிர் கல்லூரிகளில் ·தலைசிறந்து விளங்குவதும் பல சிறந்த மாணவிகளை உருவாக்கி கல்வி மேன்மைகளில் சிறந்து தமிழ் மக்களின் கலை, கலாச்சார, பாரம்பரியங்களை அடுத்தடுத்து வரும் தலைமுறைகளும் பண்பாடு மறவாது வாழ அயராது பணியாற்றிவரும் யாழ். இந்து மகளிர் கல்லூரியின் பணி போற்றுதற்குரியது.

பழைய மாணவிகளில் பலர் இன்று உலகெங்கும் தாம் கற்ற கல்வியின் மேன்மையினால் சிறந்து விளங்குகின்றனர். அத்துடன் தாம் வாழும் நாடுகளில் தமிழ் மக்களுக்கே உரிய கலை கலாச்சாரப் பாரம்பரியங்களை அடுத்த தலைமுறையும் பின்பற்றி வாழவேண்டும் என்னும் உயரிய நோக்கோடு கல்லூரியின் பெயரால் சங்கம் அமைத்து அதன்மூலம் பழைய மாணவிகள் அனைவரும் ஒன்றிணைந்து விழா எடுப்பதோடு மட்டுமன்றி தாம் கற்ற கல்லூரியின் மேன்மைக்கும் புனர்நிர்மாணத்துக்கும் கல்வி மேம்பாட்டுக்குமுரிய உபகரணங்களை அனுப்பிவைத்தும் பல சிறந்த கைங்கரியங்களை செய்து வருவதை அறிந்து இவர்களுடைய இச்சிறப்பான பணிகள் தொடர இறையருள் கிடைக்கப் பிரார்த்திப்பதோடு இவர்கள் செய்யும் நற்பணிகள் தொடர யாழ். இந்து மகளிர் கல்லூரியின் பழைய மாணவிகளுடன் சேர்ந்து அனைத்து செல்வந்த பெருமக்களும் உதவி புரிந்து யாழ் இந்து மகளிர் கல்லூரி சிறப்படைய எல்லாம் வல்ல ஸ்ரீ வரசித்தி விநாயகரின் பாதங்களில் பணிந்து பிரார்த்தித்து ஆசிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

சுபம்

**இங்ஙனம்**
**சிவஸ்ரீ. பஞ்சாட்சர விஜயகுமாரக் குருக்கள்**
**ஆலய பிரதமகுரு ஆலயஸ்தாபகர்**

# உள்ளன்போடு உழைப்போமாக

வயது அறுபது ஆயினும் யாவரும் வியக்கும் இளமைத் தோற்றம் உடையவர் எங்கள் கல்லூரித் தாயாகிய யாழ். இந்து மகளிர் கல்லூரி. அவரினால் கல்வியூட்டப்பட்ட அவரின் புதல்விகள் இன்று பார் எங்கும் பரந்து வாழ்கின்றனர். இவர்கள் இவரது மணிவிழா கண்டு மிகவும் பூரிப்படைகின்றனர். அதனைச் சிறப்பாகக் கொண்டாட கனடா வாழ் யாழ். இந்து மகளிர் கல்லூரியின் பழைய மாணவிகளும் ஆசிரியர்களும் 2003 செப்டெம்பர் 20ம் திகதி, சக்தி 2003 என்னும் கலைவிழாவையும் அதனை ஒட்டி ஒரு மலர் வெளியீட்டையும் நடாத்த முன்வந்துள்ளனர்.

எங்கள் பழைய மாணவிகள் சங்கத்தினர்க்கு இது ஒன்றும் புதுமையானதல்ல. 2000ம் ஆண்டு செப்டம்பர் 16இல் முதன் முதலாகத் தரமான கலைவிழாவை நடாத்தி சக்தி என்ற மலரையும் வெளியிட்டு பலரின் பாராட்டைப் பெற்றுள்ளனர். அதன் மூலம் பாடசாலையின் அபிவிருத்திக்காக நிதியும் திரட்டப்பட்டது. மிகவும் சிறப்பாக இடம்பெற்ற கலை விழா நிகழ்ச்சிகளில் அதிக அளவில் பழைய மாணவிகளும் அவர்களின் இளஞ்சந்ததியினருமே பங்கு பற்றினர் என்பது பெருமைக்குரியதாகும். இவர்கள் தங்கள் இயல் இசை நாடகத் துறையிலுள்ள திறமைகளினால் கலையுலகில் முத்திரை பதித்து தம் கல்லூரிக்கு பெருமையீட்டினர். இதற்குக் காரணமாக இருந்தவர்கள் சிறு தொகையினரான பழைய மாணவிகளும் ஆசிரியர்களுமே. அவர்களின் கடமை உணர்ச்சி, ஆர்வம், செயற்றிறன், நிதியுதவி போற்றுதற்குரியது.

அவர்கள் யாழ் இந்து மகளிர கல்லூரி என்னை ஆளாக்கியது, அதற்கு பணி செய்வது என் தலையாய கடமை என்ற உணர்வுடன் செயற்படுபவர்கள். இங்கு பெருமளவில் வாழும் எங்கள் கல்லூரியின் பழைய மாணவிகள் சங்கத்தின் செயற்பாடுகளுக்கு ஆதரவு நல்கினால் நாங்கள் எங்கள் கல்லூரியை மேலும் முன்னிலைக்குக் கொண்டுவரலாம். அதனால் அங்குள்ள எம் இளைய தலைமுறையினருக்கும் உதவிபுரியலாம்.

கலைநிகழ்ச்சி ஒன்று நடாத்துவதில் ஏற்படும் பணச் செலவு, சிரமம் எம்மைத் திகிலடையச் செய்த போதும், எங்கள் கல்லூரியின் மணிவிழா கொண்டாட வேண்டும் என்ற ஆர்வத்தினாலும் பாடசாலையின் அபிவிருத்திக்கு உதவ வேண்டும் என்ற அவாவினாலும் இம்முயற்சியில் எங்கள் சங்கம் இறங்கியுள்ளது. எங்கள் முயற்சி வெற்றியடைய எமது கல்லூரியின் குல தெய்வமாகிய விநாயகப் பெருமானை வேண்டி என் இதய பூர்வமான வாழ்த்தைத் தெரிவிப்பதில் மிகவும் மகிழ்ச்சி அடைகின்றேன்.

எங்கள் கல்லூரி சிறப்புற நாம்
உள்ளன்போடு உழைப்போமாக

**செல்வி. நல்லம்மா குழந்தைவேலு**
போஷகர்
பழைய மாணவி, ஆசிரியை

# செயலாளரின் எழுதுகோலிலிருந்து.....

யாழ். இந்து மகளிர் பழைய மாணவிகள் சங்கம் கனடாவில் உதயமாகி பதினொரு ஆண்டுகள் நிறை வேறுகின்றது. அதேவேளை எங்கள் கல்லூரித்தாயும் அறுபது வயதைப் பூர்த்திசெய்கின்றாள். அவரின் மணிவிழாவைக் கொண்டாட நாம் சக்தி 2003 என்னும் கலை நிகழ்ச்சியும் ஓர் மலர் வெளியீட்டையும் ஒழுங்கு செய்துள்ளோம்.

எங்கள் சங்க உறுப்பினர்கள் கடந்த இரண்டு ஆண்டுகளும் மிகவும் ஊக்கமாகச் செயற்பட்டு வந்துள்ளனர். இரண்டு திரைப்படங்கள் நிதியுதவிக் காட்சியாகக் காண்பிக்கப்பட்டன. இவ்வாண்டு SARS நோய் காரணத்தால் நாங்கள் ஒழுங்கு செய்த படக்காட்சி அதிக பணத்தை வசூலிக்கத் தவறிவிடுமோ என நாம் அஞ்சிய போதும் அது எங்களுக்கு எதிர்பார்த்ததைவிட அதிக நிதியுதவியைத் தந்தது. மேலும் பூங்காவில் விளையாட்டுப் போட்டியும் ஒன்று கூடலும் சென்ற கோடை விடுமுறைக்கு ஒழுங்கு செய்தோம். அதில் நாம் எதிர்பார்த்த அளவு அங்கத்தவர்கள் பங்கு பற்றாத பொழுதும் சமூகம் தந்த எமது முதிய அங்கத்தவர்கள் மிகவும் குதூகலமாகப் பங்கு பற்றியது எமக்கு மகிழ்ச்சியைத் தந்தது.

கல்லூரியின் அபிவிருத்திக்காக நாங்கள் ஆறாயிரம் டொலர்கள் (ரூ. 3,64,800) கொழும்பு பழைய மாணவிகள் சங்கத்தினருக்கு சென்ற ஆண்டு அனுப்பிவைத்தோம். அதில் கல்லூரிக்கு அத்தியாவசியமாகத் தேவைப்பட்ட பிரதிபதிக்கும் (Toshiba Photo copier Mode 1560) இயந்திரம் ரூ.135,000 ற்கு வாங்கிக் கொடுக்கப்பட்டது. மிகுதி கொழும்புக் கிளையின் வங்கிக் கணக்கில் பாடசாலையின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக வைக்கப்பட்டுள்ளது.


நவராத்திரி விழா இங்கு கொண்டாடப்பட வேண்டும் என எங்கள் சங்கத்தினர் நீண்ட காலமாக விரும்பினர். சென்ற ஆண்டு அதனை நிறைவேற்றக் கூடியதாக இருந்தது. நவராத்திரி விழாவில் எங்கள் இளம் சந்ததியினர் பல கலாச்சார சமய நிகழ்ச்சிகளில் ஆர்வத்துடன் பங்கு பற்றினர். எங்கள் சங்கத்தின் செயற்பாடுகளில் மிக ஆர்வத்துடன் செயலாற்றுபவர்களில் ஒருவரான திருமதி ஞானேஸ்வரி சொக்கலிங்கம் ஐக்கியராட்சியத்திற்கு இடம் பெயர்ந்தமை எமக்கு மிக மனவருத்தத்தை அளித்தது. ஆயினும் அவர் தொலைபேசிமூலம் எமக்கு வேண்டிய வேளைகளில் தொடர்ந்தும் தன் ஆதரவைத் தருவது அகமகிழ்ச்சியைத் தருகின்றது.

எங்கள் சங்கம் பல கஷ்டங்களின் மத்தியிலும் நிர்வாகக் குழுவினரின் அயராத உழைப்பினால் தன் செயற்பாடுகளை திறம்பட நடாத்தி வருகின்றது. எங்களால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள கலைவிழா சிறப்பாக நடைபெற வேண்டும் என இறைவனை வேண்டி என் மனப்பூர்வமான ஆசியைத் தெரிவிக்கின்றேன்.

**ஸ்ரீகாந்தி சதாசிவம்**
**செயலாளர்**
யா.இ.ம.க.ப.மா.ச

*With Best Compliments From*

## DR. C. P. GIRI & ASSOCIATES





**Dental Surgeons:**




DR. C.P. GIRI
DR. F. INFUSINI
DR. M. SAFA
DR. S. VISWASAM
DR. S. SAFA

சகல பல் மருத்துவ ஆலோசனை,
பல் வைத்திய சேவைக்கு!

3480 Lawrence Ave. East.
Scarborough, Ontario
M1H 1A9
**416-439-5252**



# விளையாட்டுத் துறை

யாழ். இந்து மகளிர் பழைய மாணவிகள் சங்கம் கனடாவில் விளையாட்டுத்துறையில் பல வருடங்களாக ஈடுபட்டுள்ளது. Tamil Schools Sports Association (T.S.S.A) நடாத்தும் வலைப்பந்தாட்டப் போட்டியில் எங்கள் குழுவினர்கள் பல கஷ்டங்களுக்கு மத்தியிலும் மிகவும் உற்சாகமாகப் பங்கு பற்றி வருகின்றனர். எம் குழுவில் அதிக ஊக்கமும், ஆர்வமும் காட்டி பங்குபற்றிவரும் திருமதிகள் சித்திரா பாலகுமார், ஊர்மிளா நவநீதன், செல்விகள் காயத்திரி சிவகுமார், சுகி கோடீஸ்வரன், சக்தி சிவகுமார், தனு நடராஜா, மலர்விழி வரதராஜா, மகிழ்தினி வரதராஜா, பாராட்டுக்குரியவர்களாவார்கள். இம்முறை ஏழு அங்கத்தவர்களுடனேயே விளையாடி எம் குழு மூன்றாம் இடத்தைப் பெற்றது. எமது பழைய மாணவிகள் பலர் முன்வந்து விளையாட்டுத்துறையில் தங்களையும் தங்கள் இளஞ்சந்ததியினரையும் ஈடுபடச் செய்ததால், நாம் விளையாட்டுத்துறையில் சாதனை புரிந்து எங்கள் கல்லூரியின் புகழை நிலைநாட்டலாம்.

எமது பழைய மாணவிகள் சங்கம் நடாத்தும் மணிவிழா சிறப்பாகவும் வெற்றிகரமாகவும் நடைபெற எமது வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றோம்.

**நளாயினி பிறேம்குமார்**
தலைவி - விளையாட்டுத்துறை


**கர்நாடக இசை வகுப்புக்கள்**

சங்கீதம், வீணை, மிருதங்க வகுப்புக்கள்
வட இலங்கை சங்கீத சபையின் ஆசிரியர் தராதரம்
பெற்ற
ஆசிரியர்களால்
இவ்வாண்டு (2003ல்) விஜய தசமியில்
ஆரம்பிக்கப்பட உள்ளது.



மேலதிக விபரங்களுக்கு:
**திருமதி. துஷ்யந்தி சந்திரகுமார்**
B.BA (University of Jaffna)
**திரு. ரகுராம் தில்லைச்சந்திரன்**
B.SC (Eng.)

**Tel: 416-267-5283 / 416-264-5073**

# LAW OFFICE

## T. JEGATHEESAN

*Barrister, Solicitor and Notary Public (Ont.)*

உங்கள் சட்டப்பிரச்சனைகள்
எதுவாயினும் தமிழிலும், ஆங்கிலத்திலும்
ஆலோசனைகளுக்கும் சட்ட
நடவடிக்கைகளுக்கும் தொடர்பு
கொள்ளுங்கள்



✷ Real Estate - Purchase, Sale, Mortgage
காணி, நிலம், வீடு,வாங்கல், விற்றல், அடமானம் வைத்தல்

✷ Family Law - Divorce, Separation
குடும்பம் தொடர்பான வழக்குகள் விவாகரத்து, பிரிவு

✷ Business - Purchase, Sale, Incorporation
வர்த்தக ஸ்தாபனங்கள் கொள்முதல், விற்பனை

✷ Power of Attorney - Affidafits, Statutory Declarations, Last will
தத்துவப் பத்திரம் சத்தியக் கடதாசி, உயில்

இலங்கை, இங்கிலாந்து ஆகிய நாடகளில்
இருபது ஆண்டுகளுக்கு மேலாக
அனுபவம் பெற்று கனடாவிலும்
சட்ட வல்லுனராகப் பயிற்சி பெற்றுப்
பதிவு பெற்ற தமிழ் வழக்கறிஞர்

## தி. ஜெகதீசன்

*Barrister, Solicitor and Notary Public (On)*

**2620 Eglinton Ave. E.,**
**#201 Scarborough, Ont.**
**M1K 2S3**

**Off: 416-266-6154**

**Fax: 416-266-4677**

# சங்கத்தலைவியின் ஆசியுரை

யாழ் இந்து மகளிர் கல்லூரி தோன்றி 60 வருடங்கள் உருண்டோடிவிட்டன. கல்லூரியன்னையின் மடியில் புரண்டு சமய அறிவும் கலாச்சாரமும் இணைந்த கல்வியைப் பெற்ற மாணவிகள் பலர் கனடா நாட்டிலும் பல் துறைகளிற் திறம்பட செயலாற்றிவருவது கண்டு பெருமிதமடைகின்றோம். செல்வி நல்லம்மா குழந்தைவேல் அவர்களை உயிர் நாடியாகக் கொண்டு இங்கு எமது பழைய மாணவிகள் சங்கம் மணிவிழாக் காணும் எமது கல்லூரியன்னைக்கு கலைவிழா எடுக்க முன்வந்துள்ளது மிகவும் பொருத்தமானதே.

எமது கல்லூரி மாணவிகள் தங்களுக்குக் கல்விபுகட்டிய ஆசிரியைகளை மறப்பதில்லை. ஆசிரியைகளிடம் அவர்கள் கொண்டுள்ள மதிப்பு என்றும் குன்றுவதுமில்லை. ஆரம்பத்திலிருந்து இன்றுவரை எமது கல்லூரியுடன் தொடர்பு நிலைத்திருப்பதையிட்டுப் பூரிப்படைகின்றேன்.

இவ்விழா சிறப்பாக அமையவேண்டுமென பழைய மாணவிகள் மிகவும் ஆர்வத்துடன் செயல்படுகின்றனர். அவர்களின் அயரா முயற்சி வெற்றிபெற்று இக்கலைவிழா சிறப்பாக அமைய இறைவனை வேண்டி என் ஆசிகளை வழங்குவதில் பெரும் மகிழ்ச்சியடைகின்றேன்.

**திருமதி ஞானசம்பந்தன்**
**தலைவர்**
யா.இ.ம.ப.மா.ச.கனடா

*இன்னறுங்கனிச் சோலைகள் செய்தல்*
*இனிய நீர்த்தண் சுனைகள் இயற்றல்*
*அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல்*
*ஆலயம் பதினாயிரம் நாட்டல்*
*பின்னருள்ள தருமங்கள் யாவும்*
*பெயர் விளங்கி ஒளிர நிறுத்தல்*
*அன்ன யாவினும் புண்ணியங்கோடி*
*ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்*

*With Best Wishes From*

# A1 TOP QUALITY FLORIST

**ரொப் குவாலிற்றி பூக்கடை**

அதி உயர் மலர்க் களஞ்சியம்

ரொறன்ரோவில் முதன் முதலாக ஈழத்தமிழ் மகனின் 27 வருட அனுபவத்தில உங்கள் (இந்து, கிறிஸ்தவ) மங்களகரமான திருமண,பூப்புனித நீராட்டு விழாவுக்கான மாலை, பூ மணவறை, வட்ட மணவறை, சதுர மணவறை, சரம், சடை நாகம், என்பவற்றைக் குறைந்த விலையில் தரமாகப் பெற்றிட நாடுங்கள்

**2871 Lawrence Ave. E.**
**Scarborough, ON M1P 2S8**
(Between McCowan & Brimley)



*Call Pillai*

Tel : 416-269-5522
Fax: 416-269-9784
Cell: 416-989-0207

# JAFFNA HINDU LADIES' COLLEGE

Tel & Fax : 021-2222346 E-Mail : jhlc@slt.lk

JAFFNA.
(SRILANKA)

**Principal**
Mrs.S.JEYARAJAH, B.A.(Hons), Dip-in-Ed.SLPS 1

20.07.2003.

## ஆசிதரும் இன்றைய கல்லூரி அதிபர்

யாழ் இந்து மகளிர் கல்லூரியின் பழைய மாணவிகள் கனடாவில் கலைவிழா எடுத்து சக்தி 2003 மலரினை 2ம் முறையாக வெளியிடுவதையிட்டுப் பெருமகிழ்சி அடைகின்றேன். தமக்கு அறிவூட்டிய கல்லூரித்தாயை மறவாத நெஞ்சத்துடன் தம்மை மேலும் வளர்ப்பதோடு நின்றுவிடாது கல்லூரியை நினைத்து மலரினை வெளியிடுவது அவர்களது உயர்ந்த உள்ளங்களின் வெளிப்பாடாகும். தனது 60ஆவது ஆண்டுகளைப் பூர்த்தி செய்து மணிவிழாக் காணும் கல்லூரி தனது வாரிசுகளின் இவ்விழாக் கண்டு இரட்டிப்பு மகிழ்ச்சியடைகின்றது.

புலம் பெயர்ந்த நிலையிலும் தமது அயராத முயற்சியினால் பழைய மாணவர் சங்கத்தினை வளர்த்துக் கல்லூரிக்கு உதவிவரும் உறுப்பினர்கள் அங்கும் விழா எடுப்பதையிட்டுப் பெருமைப்படுகின்றோம். அவர்களது பணி சிறக்கவும் அவர் தம் வாழ்க்கை வளம்பெறவும் என்றும் எமது ஆசி உரித்தாகுக.

கல்லூரியின் வளர்ச்சிக்காக உழைக்கும் அவர்களையும் குறிப்பாகக் காப்பாளர் செல்வி நல்லம்மா குழந்தைவேல் அவர்களையும் எங்களால் என்றும் மறக்க முடியாது. அண்மையில் கொழும்புச் சங்கத்தின் மூலமாகக் கல்லூரிக்குப் பிரதி செய்யும் இயந்திரம் (Photo Copy Machine) ஒன்றினை வழங்கியுள்ளனர். இவர்களது இச் செயற்பாடு எமது கல்விச்செயற்பாட்டிற்குப் பெரிதும் உதவியாக உள்ளது. சான்றோர்களாகிய இப்பிள்ளைகளை வளர்த்தெடுத்த கல்லூரித்தாய் அவர்களையிட்டுப் பெரும் உவகையடைகின்றாள். அவர்களது பணி தொடர வேண்டுமென்றும் வெற்றியுடன் அமைய வேண்டும் எனவும் மனமார வாழ்த்துகின்றேன்.

**திருமதி. எஸ். ஜெயராஜா**

*With Best Compliments From*

# பாலா செல்வம்

**நகை மாளிகை&**

**துரித பணமாற்றுச்சேவை**

# BALA - SELVAM

**JEWELLERY & FOREIGN EXCHANGE**

2480 EGLINTON AVENUE EAST,

UNIT #6 SCARBOROUGH

(Midland / Eglinton)

**TEL: (416) 264-4000**

# நல்வாழ்த்துக்கள்.....

ஆயகலைகள் அறுபத்திநான்கினையும் தன் மாணவச் செல்வங்களுக்குக் கடந்த அறுபது வருடங்களாக ஆற்றி ஊட்டிய இந்து மகளிர் கல்லூரியாம் எம் அன்னைக்கு இந்த 2003ஆம் ஆண்டு வைரவிழா ஆண்டாக அமைகின்றது.

உலகெங்கும் செறிந்து வாழும் எம் கல்லூரியின் பழைய மாணவிகள் தாங்கள் வாழும் நாட்டில் பழைய மாணவர் சங்கக் கிளைகளை அமைத்து இந்து மகளிர் தம் இலட்சிய நிறைவில் வெற்றியீட்ட தங்களாலான ஒத்துழைப்பை நல்கி வருகின்றார்கள். யாழ். இந்து மகளிர் கல்லூரிப் பழைய மாணவர் சங்கக் கிளைகள் செயல்படும் நாடுகளிலெல்லாம் எம் கல்லூரியின் வைரவிழாவினை விமரிசையாகக் கொண்டாட ஆயத்தங்கள் நடைபெறுவதையிட்டு தாய்ச் சங்கத்தின் தலைவியான எனக்கு மிக மகிழ்ச்சியாக இருக்கின்றது.

கனடாவாழ் பழைய மாணவிகள் தம் கல்லூரிக்கு இதய அர்ப்பணிப்புடன் ஆற்றும் சேவைகளை நான் நன்கு அறிவேன். இவ்வைர விழா ஆண்டில் அன்னைக்கு விழா எடுப்பதுடன் அன்னைக்குச் சூட இருக்கும் சக்தி வைரவிழா மலர் அழகுடனும் ஆக்கமுடனும் அமைய என் மனமார்ந்த நல்வாழ்த்துக்கள்.

**திருமதி திலகவதி யோகநாதன்**
தலைவி - தாய்ச் சங்கம்
யா.இ.ம.க.ப.மா.ச



*With the*

*Best compliments*

*from*

**LOGAN SENATHIRASA, CA, CMA**

Chartered Accountant
(Licensed under the Public Accountancy Act of Ontario)

**Tel: (416) 284-6700**
**Fax: (416) 284-7501**

11 Milroy Crescent, Scarborough, ON. M1C 4B6

# வாழ்க பல்லாண்டு !

யாழ். இந்து மகளிர் கல்லூரிப் பழைய மாணவியர் சங்கம் தனது கல்லூரியின் 60 ஆண்டு பூர்த்தியைக் கொண்டாட சக்தி 2003 என்று விழா எடுக்கின்றது. சமய இன கலாச்சாரத்தைப் பேண உதவும் இச் சக்திக் கலைவிழாவை நாங்கள் 2000லும் நடாத்தி, எல்லோரதும் ஏகோபித்த பாராட்டைப் பெற்றோம். அன்று 2000இல் சக்தி என்றொரு அழகிய மலரும் வெளியிட்டோம்.

பெண்கள் கல்விபெறவேண்டும் தங்கள் சமய கலை, கலாச்சாரம் பண்பாடுகளில் பயிற்சி பெறவேண்டும் என்ற சீரிய நோக்கோடு யாழ் இந்து மகளிர் கல்லூரி 1943ம் ஆண்டு வண்ணார்பண்ணையில் உள்ள சைவப் பெரியார்களால் ஆரம்பிக்கப்பட்டது. அங்கு நிறை அறிவு பெற்ற அதன் மாணவிகள், புலம் பெயர்ந்தும் புலன் பெயராது, தாம் பெற்ற அறிவை தாங்கள் தற்பொழுது வாழும் இடங்களில் பேணிவளர்ப்பதில் ஆர்வங்காட்டுகின்றனர். உலகின் பல தேசங்களிலும் பழைய மாணவியர் சங்கங்கள் இயங்குகின்றன. அவற்றுள் முதலிடம் வகிப்பது நமது கனடாக் கிளைச் சங்கமே என்று பெருமையுடன் கூறவிரும்புகின்றோம்.

பல் இனமொழி கலாச்சாரங்களை வரவேற்கும் உயர்ந்த உள்ளம் கொண்ட கனடாவிற்கு எங்கள் நன்றி உரித்தாகுக. இவ்வாண்டு வைரவிழாக்காணும் கல்லூரியைப் பாராட்டுமுகமாக இம்முறை எடுக்கும் விழா, மிகச்சிறந்ததாக அமையப்போகின்றது. அதற்குக் காரணமாக இருக்கும் செல்வி நல்லம்மா குழந்தைவேலு, திருமதி சரஸ்வதி ஞானசம்பந்தன் மற்றும் நிர்வாகக்குழு அங்கத்தவர்கள் எல்லோருக்கும் எனது மனமார்ந்த பாராட்டுக்கள். இவர்களது முயற்சி திருவினையாக்கும் என்பதில் ஐயமில்லை.

இவ்விழா வெற்றிகரமாக அமைய இக்கல்லூரியின் குலதெய்வமாக நடுத்தோட்டத்தில் விளங்கும் இராசவரோதயப் பிள்ளையாரை வேண்டுகின்றேன்.

சீரிய வளர்ச்சி பெற்று விளங்கும் நம் கல்லூரி பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு வாழ்க! வளர்க! வளர்க! என வாழ்த்துகின்றேன்.

**திருமதி இராஜேஸ்வரி சண்முகம்**
முன்னாள் பிரதி அதிபர், முன்னாள் தலைவி
யா.இ.ம.க.ப.மா.ச

*With Best Compliments From*

**Finch - Warden சந்திப்பில்**
**தமிழ் வைத்தியர்களின்**

# Walk in Medical Clinic

வாரத்தில் ஏழு நாட்களும்
வார நாட்களில் இரவு 11 மணிவரை

**Dr. S. மணிவண்ணன்**
**MD, CCFP**

**Dr. T. நித்தியலக்ஷ்மி**
**MBBS, CCFP**

**Dr. மேதர் டிலிப்குமார்**
**MBBS, CCFP**

**Dr. V. விஜயரட்ணம்**
**MD, FRCPC**

**Dr. K. ஜெயலிங்கம்**
**MD, FRCPC**

**Finch Warden Pharmacy** உட்புறமாக
**(Finch & Warden)**
**3430 Finch Avenue East, Unit 6A**
**Scarborough**

**Tel: 416-496-1990**

# வாழ்த்துகின்றார்கள்.....

கனடாவில் செயற்படும் எமது கல்லூரிப் பழைய மாணவிகளுடன் மீண்டும் கல்லூரிக் கலை விழா சிறப்பு மலர் மூலம் சந்திப்பதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.

கல்விச் செல்வம் காலத்தால் அழியாதது. அது பாறைக்கடியில் இருக்கும் வைரக் கல்லாக இருக்காமல் பட்டை தீட்டப்பட்டு பளபளப்பு உள்ளதாக ஒளிவிடும் விதத்தில் மாற்றப்படவேண்டும். ஆம் இந்தப் பணியை 60 ஆண்டுகளாக செவ்வனே செய்துவரும் யாழ் இந்து மகளிர் கல்லூரியில் பட்டை தீட்டப்பட்ட வைரங்களாக அறிவொளியுடன் திகழும் கனடா வாழ் பழைய மாணவிகள் தமது கல்லூரிக்கு அரிய பணிகளை ஆற்றி வருகின்றனர். கொழும்புக் கிளையுடன் இணைந்து பணிபுரிந்து எமக்கும் பெருமை சேர்க்கின்றனர்.

பெண்மை வளங்காண அன்று இந்து மக்கள் யாழ்ப்பாணத்தில் வித்தியாகூடம் அமைத்தனர். இன்னும் அது புதுப் பொலிவுடன் காலத்தின் தேவையை உணர்ந்து அறிவியல் துறையில் எம் பெண்கள் வீறுநடை போடுவதற்கு சகல முயற்சிகளையும் மேற்கொள்வது மகிழ்ச்சிக்குரியது. அங்கு கணனித்துறை அறிவு வளர்ச்சிக்கு கனடா வாழ் பழைய மாணவிகள் ஆற்றும் உதவி வரவேற்கத்தக்கது. வேதனையின் மத்தியில் இன்னமும் வாழ்ந்து கொண்டிருக்கும் எம் இளம் சந்ததியினருக்கு கல்விதான் மிதக்கவைக்கும் தெப்பமாக உள்ளது. உங்கள் சங்கமும், எமது சங்கமும் அந்தத் தெப்பத்தில் அவர்கள் கரைசேர எம்மாலான உதவிகளைச் செய்யும் கடப்பாட்டைக் கொண்டிருக்கின்றோம்.

தமிழர்களுக்கும் கடல் அலைகளுக்கும் ஒரு தலையெழுத்து. உலகம் எங்கும் அலையும் தலையெழுத்து. சமூக உயர்விற்குப் பிறந்த மண்ணில் சரியான உரத்தை நாம் இடத் தவறியதால் இந்நிலை. ஆயினும் அலைந்து இங்கிருந்து சென்றுவிட்ட நிலையிலும் அடிவேரை மீண்டும் துளிர் விடச் செய்ய வேண்டும் என்ற துடிப்புடன் செயற்படும் உங்களை எமது மன்ற அங்கத்தவர்கள் மனமார வாழ்த்துகின்றார்கள். தங்கள் பணி சிறக்கட்டும். தொடரட்டும்

**செல்வி சற்சொருபவதி நாதன்**
**தலைவி**
யா.இ.ம.க.ப.மா.ச
கொழும்புக் கிளை

*With Best Wishes From*

**RBC Financial Group**

# HELP IS NEAR YOUR HOME

உங்களுக்கு ஓர் இல்லம் வாங்குவதற்குத் தேவையான நிதியை மிகவும் இலகுவான முறையிலும் மிகவும் குறைந்த வட்டி வீதத்திலும் குறுகிய நேரத்தில் பெற்றுத் தந்திட றோயல் வங்கியில் 12 வருட கால அனுபவம் பெற்ற வின்சன் சின்னத்துரையை நாடுங்கள்

தேவை ஏற்படின் உங்கள் இல்லங்களுக்கு வந்து சகல ஒழுங்குகளும் செய்து தரப்படும்

Trust

**VINCE SINNADURAI**

Account Manger & Mortgage Specialist

for all your Purchase, Switch and Refinancing

**Tel: 416-438-7358**

**Fax: 416-438-3451**

**Cell: 416-917-9462**

Email: vincent.sinnadurai@royalbank.com

# புகழ்பாடுவோம்

எங்களை அன்பூட்டி, அறிவூட்டி பண்பூட்டி ஆளாக்கிய எங்கள் கல்லூரித் தாயை மறவாமல், அவரின் புகழ்பாடிக் கொண்டிருக்கும் கனடா வாழ் யாழ் - இந்து மகளிர் கல்லூரி பழைய மாணவிகளே!

மணிவிழா காணும் எங்கள் கல்லூரித்தாயின் புகழ்பாட நீங்கள் எடுக்கும் கலைவிழா - சக்தி 2003 சிறப்பாக நடைபெற வேண்டுமென்று தென்புலத்து அவுஸ்திரேலியாவில் வாழ்ந்துகொண்டிருக்கும் தங்கள் சகோதரிகள் இறைவனை வேண்டி வாழ்த்துகின்றனர்.

**ரஜனி**
**தலைவி**
யா.இ.ம.க.ப.மா.ச
**அவுஸ்திரேலியா**

*With Best Compliments From*

**Elane Cinemas**

2800 Eglinton Avenue East 266-3456

Show Time : (416) 266-3456
Hot Line : (416) 703-8020

# ராஜாராம்

## உணவுச் சேவை

அறுசுவை உணவை ராஜரீதியில் பணிவுடன் படைத்திடுவோம்

திருமணமா, பிறந்ததினமா, கல்லூரியின் அல்லது ஸ்தாபனங்களின்
வருடாந்த விழாக்களா வேறு வைபவங்களா, அந்தியஷ்டியா, திவசமா,
வீட்டில் நடக்கும் சிறு வைபவமா எதுவானாலும் கூறுங்கள்
வகை செய்வோம்




தரமான
பாகம்

தவறாத
நேரம்

தரமோ
நிரந்தரம்

**Raja Ram Caterers**

589 Middlefield Road #20,
Scarborough, ON M1V 4Y6
(416) 299-5200 / (905) 471-0514

## நல்லாசிகள்.....

யாழ். இந்து மகளிர் கல்லூரி ஆரம்பித்து இவ்வாண்டுடன் அறுபது ஆண்டுகள் பூர்த்தியாகின்றன. இதற்காக மணிவிழா எடுத்துக் கொண்டாடவுள்ளது, கனடா இந்து மகளிர் பழைய மாணவியர் சங்கம். கனடாவில் பத்து வருடத்துகிற்கு மேலாக செயல்பட்டுவரும் இச்சங்கம் பல ஆக்கபூர்வமான செயற்பாடுகள், கலைவிழாக்கள், ஒன்றுகூடல்கள் ஆகியவற்றை ஆண்டுதோறும் வெற்றிகரமாக நடாத்தியுள்ளது. இத்துடன் சக்தி - 2000 என்ற மகத்தான கலைவிழாவொன்றினை நடாத்தி சக்தி மலர் என்ற நூலினையும் வெளியிட்டுள்ளது. எமது கல்லூரியன்னையின் மணிவிழா மாபெரும் வெற்றியடைய ஐக்கியராட்சியம் வாழ் யாழ். இந்து மகளிர் கல்லூரி பழைய மாணவியர் சங்கத்தின் சார்பில் எனது நல்லாசிகளையும் வாழ்த்துக்களையும் கூறி எமக்கு மணிவிழாக் கொண்டாட்டம் பற்றி அறியத்தந்தமைக்கு நன்றியையும் கூறுகின்றேன்.

**செல்வி. பாலஜேஸ்வரி ஆறுமுகம்**
**தலைவர்**
யாழ் இந்து மகளிர் கல்லூரி பழைய மாணவிகள் சங்கம்
**ஐக்கியராட்சியம்**

**Neelam** *Silk*

முகூர்த்தப் பட்டுப் புடவைகளுக்கு இராசியான இடம்

உங்கள் எண்ணத்தில் தோன்றும் வண்ணக் கனவுகளை
வண்ணவண்ணப் பட்டுச் சேலைகளின் வடிவில் பெற்றுக்
கொள்ள.....
நாடுங்கள்

**நீலம் சில்க்**

1453 GERRARD ST. E.
TORONTO, ON M4L 1Z9
TEL: (416) 778-7455
FAX: (416) 778-8484

2378 EGLINTON AVE. E.
SCARBOROUGH, ON
TEL: (416) 759-2002

*With Best Compliments From*

**Raj Kiruba MD, BMBBS, CCFP**

Family Physician

**2 Fenton Road, Unit 4**
**Markham, Ontario**
**L3R 7B4**

**Tel: (905) 948-9455**
**(905) 948-9534**
**Fax: (905) 948-0570**



# மணிவிழாக் காணும் கல்லூரி

ஈழ நாட்டின்
இலங்கிடும் திலகம்
இந்து மகளிர்
இனிய கல்லூரி

எழிலுறு மங்கை
மணிவிழாக் காண்கிறாள்

அறுபது என்ன
அறுநூறு செல்லினும்
அழகும் இளமையும்
ஆட்சியும் மாட்சியும்

உயர்ச்சியும் உடைய
உன்னதத் தாயே!

எத்தனை நங்கையர்
எங்கும் பரந்து
நித்தில மாக
நிலவுறார் உன்னால்

சைவமும் தமிழும்
தழைத்திடச் செய்து
வையத்து வனிதையர்
வாழ்வாங்கு வாழ

இருளினை அகற்றி
ஒளியினை நல்கி
மருளது இன்றி
மாண்பொடு வாழ்ந்திட

அருள் பாலிக்கும்
அன்னை நீயே
புலம் பெயர் நாட்டிலும்
பலம் குன்றாது

பெண்மைக் குரிய
பண்புகளோடு
கண்ணியமாகக்
கண்ணே வாழ் எனக்

கற்றுத் தந்த
கல்லூரித் தாயே!
உன்னை நாம் மறவோம்
உல கெங்கிருப்பினும்

காலம் முழுதும்
களிப்புடன் துதிப்போம்
ஞாலம் எங்கும்
நின் புகழ் துலங்கும்!

அகவை அறுபதில்
அனைவரும் போற்ற
புதுமை புகுத்தி
புனிதம் பேணி

தலை நிமிர்ந்தின்றும்
தனித்துவ மான

நிலையினில் உயர்ந்து
நின்னது கடமையில்
ஒரு சிறிதேனும்
குறைவது இன்றி

இன்னல் களு டும்
இம்மி யேனும்
தளர்வடையாது
தனிப்பெரும் மிளிர்வுடன்

வளர்கிறாய் என்பது
மனத்தினை நிறைத்து
மகிழ் வளிக்கின்றது

அன்னையே உன்னை நாம்
ஆராதிக்கிறோம்
இன்னும் உன் ஆசியே
எமை ஊக்குவிக்குது

உன்
போதனை நெஞ்சில் நின்று
வேதனை தனை அகற்றி
சாதனை படைத்திடென்று
ரகசியம் சொல்லுதம்மா

இருவிழி திறக்கும் போதும்
இடைக்கிடை ஞாபகங்கள்
வருகின்ற போது நெஞ்சம்
பெருமிதம் கொள்ளுதம்மா

கருவிழி மூடும் போதும்
கனவிலே வந்து நின்று
தமிழினை மறந்திடாதீர்
சமயத்தைத் துறந்திடாதீர்

கடமையைச் செய்திடுங்கள் -
என்ற
கனி மொழி கேட்குதம்மா -
எம
மடமையைக் களைந்த தாயே
மறப்போமோ பிறப்பிற்
கெல்லாம்

மேன்மேலும் நீ வளர்ந்து
மேன்மைகள் பலவும் பெற்று

நாட்டிற்கும் சேவை செய்யும்
நற்புகழ் பெறுவ தோடு
வீட்டிற்கும் வேண்டும் நல்ல
மேதகு பெண்களாக

உருவாக்க வேண்டுமென்று
உன்னை நாம் வேண்டிக்
கொண்டு

என்றும் நீ இளமையோடு
குன்றாத பெருமையோடு
மன்றெலாம் உயர்ந்து நின்று
வான்புகழ் பரப்பி நீயும்

வளர்ந்திட வேண்டும் என்று
வாழ்த்தி நாம்
வணங்குகின்றோம்
வாழ்க பல்லாண்டு தாயே
வாழ்க்கை நூறாண்டு
ஆண்டாய்

மணிவிழா இன்று காணும்
மாண்புறு கல்லூரித் தாயே!
இணையற்ற பெருமையோடு
என்றுமே நிலைத்து வாழ்க!

வாழ்க!... வாழ்க!...
வாழிய வாழிய...
நன்றி... வணக்கம்

**மலர் சிதம்பரப்பிள்ளை**
பழைய மாணவி

*With Best Compliments From*

# JET TRAVELS

**BETTER PRICE - GREAT SERVICE**

- கொழும்பு-ரொறன்ரோ, சென்னை ரொறன்ரோ விசேட விமானக் கட்டணங்கள்
- உலகில் எப்பாகத்திற்கும் துரிதமாகவும் மலிவாகவும் செல்ல எம்மை அழையுங்கள்
- கொழும்பிலும் இந்தியாவிலும் சகோதர நிறுவனங்கள் கொண்ட நிறுவனம். ஆகவே உடனடித்தேவைகளுக்கு சகோதர நிறுவனங்களை நாடலாம்.
- அனுபவம், திறமை, நேர்மையான முகவர்களைக் கொண்ட நிறுவனம்



**4429 Sheppard Ave. East, Scarborough, ONT**

(Brimley & Sheppard)

**Tel: 416-291-0177**

**Fax: 416-291-4049**

## JAFFNA HINDU LADIES' OLD GIRLS' ASSOCIATION- CANADA BRANCH
### STATEMENT OF OPERATIONS AND ACCUMULATED SURPLUS
FOR THE PERIOD FROM- SEPTEMBER 14, 2001 TO AUGUST 25, 2003

| | SCHOOL | PICNIC | AGM | BENEFIT SHOW | JSSA | GENERAL | TOTAL 2003 |
|---|---|---|---|---|---|---|---|
| REVENUE | | | | | | | |
| MEMBERSHIP FEES-2001 | | | 400.00 | | | | |
| MEMBERSHIP FEES-2002 | | | 530.00 | | | | |
| TICKET SALES-2002 | | | | 1105.00 | | | |
| TICKET SALES-2003 | | | | 1695.00 | | | |
| ENTRANCE COLLECTION | | 273.00 | | | | | |
| O/S CASH RCD. | | | | | | 30.00 | |
| RAFFLE SALE-2002 | | | 94.00 | | | | |
| TOTAL | 0.00 | 273.00 | 1024.00 | 2800.00 | 0.00 | 30.00 | $4,127.00 |
| EXPENSES | | | | | | | |
| HALL RENTAL-2001 | | | 75.00 | | | | |
| INSURANCE-2001 | | | 54.50 | | | | |
| STRING HOPPERS-2001 | | | 48.00 | | | | |
| HALL RENTAL-2002 | | | 75.00 | | | | |
| INSURANCE-2002 | | | 61.00 | | | | |
| MISC-2002 | | | 32.88 | | | | |
| STRING HOPPERS-2002 | | | 35.00 | | | | |
| UTHAYAN AD-2002. | | | 20.00 | | | | |
| RAFFLE-SAREE | | | 30.00 | | | | |
| ENTRY FEES-2001 | | | | | 130.00 | | |
| ENTRY FEES-2002 | | | | | 120.00 | | |
| ENTRY FEES-2003 | | | | | 110.00 | | |
| TEAM SNACKS-2003 | | | | | 30.00 | | |
| MOVIE RENTAL-2002 | | | | 400.00 | | | |
| MOVIE RENTAL-2003 | | | | 400.00 | | | |
| MOVIE TICKET PRINT-03 | | | | 75.00 | | | |
| UK DINNER-2001 | | | | | 155.00 | | |
| NOTE BELOW. SENT TO J.H.L.C. OGA COLOMBO-FOR SCHOOL NEEDS * | 6010.00 | | | | | | |
| WREATH-OLD GIRL | | | | | | 75.00 | |
| CAR HIRE | | | | | | 30.00 | |
| PARK RENTAL | | 107.00 | | | | | |
| WATER & SOFT DRINK | | 50.00 | | | | | |
| SHORT EATS | | 80.00 | | | | | |
| GIFT | | 36.00 | | | | | |
| TOTAL | 6010.00 | 273.00 | 431.38 | 875.00 | 545.00 | 105.00 | $8,239.38 |
| EXCESS (DEFICIENCY OF )INCOME OVER EXPENSES | -6010.00 | 0.00 | 592.62 | 1925.00 | -545.00 | -75.00 | -4112.38 |
| ACCUMULATED SURPLUS, OPENING. | | | | | | | 10335.62 |
| Cash in Hand | | | | | | | 88.00 |
| ACCUMULATED SURPLUS, CLOSING | | | | | | * | $6,311.24 |
| REPRESENTED BY: | | | | | | | |
| Cash at Bank | | | | | | | 6049.64 |
| Petty Cash in Hand | | | | | | | 261.60 |
| Accounts Receivable | | | | | | | |
| | | | | | | * | $6,311.24 |

* $6010 Cad = 364,000 Ruppees was sent to OGA Colombo. Of this, 135,000 Ruppees was used to Buy Toshiba photo Copier for the School.

## நிகழ்ச்சி

காலம்: 2003 செ

சனிக்கிழமை மால

5.30 மங்கள விளக்கேற்றல்
தமிழ்த்தாய் வாழ்த்து
தேசிய கீதம்
கல்லூரிக் கீதம்
மௌன அஞ்சலி

5.45 புஷ்பாஞ்சலி

5.55 கவிதை
தலைவர் உரை
கௌரவித்தல்

6.05 நாட்டார் பாடல்

6.25 ஓரங்க நாடகம்

6.30 கதம்பம்

7.10 நடனம்

7.15 பேச்சு

7.20 ஹாசிய நிகழ்ச்சி

7.25 நாடகம்

7.45 நடனம்

## ச்சி நிரல்
3 செப்டெம்பர் 20
மாலை 5.30மணி

8.00 இடைவேளை

8.25 நன்றியுரை

8.30 வாத்திய இசை

8.50 திரை இசை

9.30 மெல்லிசை

9.45 நடனம்

9.55 நாடகம்

நிகழ்ச்சித் தொகுப்பு
திருமதி தேவகி முனீஸ்வரராஜா
திருமதி தனுஷா நரேந்திரன்



# சக்தி
## என்றால்
# காப்புறுதி

**சகல காப்புறுதி நிறுவனங்களினதும் பிரதிநிதி**

காப்புறுதித் துறையில் ***1983***இலிருந்து அனுபவம் மிக்க
**சக்திவேலை** நாடவேண்டிய காரணங்களில் ஒரு சில:

***5000 திற்கும் அதிகமான பல்வேறின வாடிக்கையாளர்களுக்கு அவரவர் திருப்திற்கேற்ப திட்டங்களை அளித்து இதுவரை 50 Death Claims இனை பல்வேறு காப்புறுதி ஸ்தாபனங்களிலிருந்து இரண்டொரு தினங்களில் மீட்டுக் கொடுத்துத் தன் செயல் திறமையையும் ஆழ்ந்த அறிவுத் திறமையையும் நிரூபித்தவர்***

- ஆயுள் காப்புறுதித் திட்டம்
- வருமான காப்புறுதித் திட்டம்
- உயிர்சேதத்தினால் பாதிக்கப்பட்டோருக் கான காப்புறுதித் திட்டம் (ஒருகோடி வரை)
- விடுமுறைக்கு வருவோர், பிரயாணிகள், **OHIP** இல்லாதோருக்கான காப்புறுதித் திட்டம்
- மருத்துவ ரீதியின்றி கொடுபடும் காப்புறுதித் திட்டம் (வயது 0-85), $250,000 வரை
- கடனாளிகளிடம் இருந்து விடுவிக்கும் சேமிப்புத் திட்டம்
- வருமானவரி விலக்குள்ள ஓய்வு ஊதியத் திட்டம் (வயது 100 வரை)
- நிபந்தனையற்ற சிறந்த கல்வித் திட்டங் கள்
- வளர்ப்பு பிராணிகளுக்கான காப்புறுதித் திட்டம்

**புகைத்தல் பாவிப்போருக்கு விசேட சலுகை**

வாகனக் காப்புறுதி, தீக்காப்புறுதி தவிர்ந்த மேற்கூறிய ஏனைய காப்புறுதித் திட்டங்களைப் பெற்றுக் கொடுக்கவல்ல தொழில்நுட்ப அறிவும் ஆற்றலும் கொண்டவர். அத்தோடு எவ்வித சுகவீனம் காரணமாக உங்களது ஆயுள் காப்புறுதி நிராகரிக்கப்பட்டிருந்தாலும் நிலைமையை நன்கு ஆராய்ந்து அதற்குரிய காப்புறுதித் திட்டத்தை பெற்றுக் கொடுக்கும் ஆர்வமும் தகைமையும் கொண்டவர்

**வீடு: (905) 428-9299**
**அலுவலகம்: (416) 283-5795**
**Cell: (416) 706-3530**

**Pager: (416) 442-1042**
**Fax: (905) 428-9307**
***Email:***
sakthi@pathcom.com

# கேடில் விழுச் செல்வம்

மனிதன் வையத்தில் வாழ்வாங்கு வாழ்வதற்கு வழியமைத்துக் கொடுப்பவை அவன் பெற்ற கல்வியும் அவன் பின்பற்றுகின்ற ஒழுக்கநெறியுமேயாகும். இதனாலேயே கல்வியின் மகிமையை ‘ கேடில் விழுச் செல்வம் ’ என்றும், ஒழுக்கத்தின் மேன்மையை ‘‘ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்’’ என்றும் வள்ளுவர் பெருமைப்படுத்தினார். ஒருவர் சிறந்த கல்விமானாகி நல்லொழுக்க நெறியிலிருந்து சிறிதும் வழுவாதிருக்கும்போது அவரை சமுதாயம் போற்றுகின்றது. கல்வியில் மேம்பட்டுத் திகழும்போது அவர் நல்லொழுக்க நெறிகளைப் பின்பற்றும் மனப்பக்குவத்தை இயல்பாகவே பெறுகின்றார். எனவே கல்வி வாழ்க்கையில் முன்னேறுவதற்குரிய அடிநாதமாக விளங்குகின்றது. இதனாலேயே திருக்குறளில் கல்விக்கு மிகுந்த முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. திருவள்ளுவர் கல்வி என்ற அதிகாரத்தில் கல்வியின் சிறப்பை எடுத்துரைக்க முனைந்து, பத்துக் குறள்கள் போதாத நிலையில் கல்லாமை என்ற அடுத்த அதிகாரத்தில் கல்லாமையின் இழிவைக் குறிப்பிடுவதன்வாயிலாக கல்வியின் முக்கியத்துவத்தைப் புலப்படுத்துகின்றார். கேள்வி, அறிவுடைமை ஆகிய அடுத்தடுத்த அதிகாரங்கள் கூட கல்வியின் மகிமையை உணர்த்தும் நோக்குடனேயே கூறப்பட்டவையாகும்.

நாம் வாழ்நாள் முழுவதும் தேடிச் சேகரிக்கும் பொருட்செல்வமானது ஒரு நொடிப்பொழுதில் அழிந்துபோகும் இயல்பினது. ஆனால் நாம் கற்ற கல்விச் செல்வமோ எனின் ஏழுபிறப்பிலும் உதவும் தன்மையுடையதாகும் என்பது வள்ளுவர் கருத்தாகும்.

> ‘‘ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு
> எழுமையும் ஏமாப் புடைத்து’’ (398)

வள்ளுவர் வாக்குக்கமைய குறிப்பாக ஈழத்தமிழ் மக்கள் கல்விக்கு முக்கியத்துவம் அளித்துவருவதை நாம் அறிவோம். தமிழ் மக்களின் அரும்பெரும் அழியாச் செல்வம் கல்வியாகும். காலம் காலமாகக் கஷ்டப்பட்டுச் சேகரித்துக் கட்டிய வீடுவாசல், சொத்து அத்தனையும் ஒரு நொடிப் பொழுதில் அழிக்கப்பட்ட நிலையில் ஏதிலிகளாகி தம் வாழ்விடம் விட்டுப் புலம்பெயர்ந்து சொந்த நாட்டிலும், பிற நாடுகளிலும் வாழும் எம் இனத்தவரிடம் எவராலும் அழிக்க முடியாது நிலைத்திருப்பது கல்விச் செல்வமே. இவர்கள் கல்வியின் சிறப்பையும், முக்கியத்துவத்தையும் அனுபவரீதியாக உணர்ந்தவர்கள். பொதுவாக தமிழ் மக்கள் தம் பிள்ளைகளின் கல்வி வளர்ச்சியில் மிகவும் அக்கறை காட்டுபவர்கள். பிள்ளைகளை நல்வழிப்படுத்தி, அவர்கள் படித்துப் பட்டங்கள் பலபெற்று, நல்லொழுக்கநெறியில் நின்று சிறப்போடு வாழவேண்டும் என்பதற்காகத் தம் வாழ்க்கை முழுவதும் அரும்பாடுபடுவர்கள் தமிழர்கள்.

> ‘‘ ஈன்று புறந்தருதல் என்தலைக் கடனே
> சான்றோனாக்குதல் தந்தைக்குக் கடனே..’’

என வரும் புறநானூற்றுச் செய்யுளில் (312: 1-2) பொன்முடியார் என்ற புலவர் பெற்றோரின் கடமைகளை உணர்த்துகின்றார். சங்ககாலத்திற்கூட வாழ்ந்த புலவர் பிள்ளைகளின் கல்வி வளர்ச்சியினைக் கவனிக்கும் கடமை தந்தைக்குரியதாகக் குறிப்பிட்டமை நோக்கத்தக்கது.

சிறுவயதிலிருந்தே எமக்குக் கல்வி அறிவை வழங்கி வாழ்க்கையில் முன்னேற வழிகாட்டியாக விளங்குபவை கல்வி கற்கும் பாடசாலைகளும், கல்லூரிகளுமேயாகும். ஆரம்பக் கல்வியிலிருந்து பல்கலைக்கழகத்திற்குச் செல்லும்வரையும் நாம் கற்கும் கல்வியே எங்கள் மேற்படிப்பைச் செவ்வனே தொடர்வதற்கு அத்திவாரமாக அமைகின்றது. கடந்த கால்நூற்றாண்டு காலமாகத் தாயகத்தில் நிலவும் போர்க்காலச் சூழலில் பல பாடசாலைகளும், கல்லூரிகளும் அழிக்கப்பட்டுள்ளன. ஆய்வு கூடங்கள், நூலகங்கள் என்பன சேதமாக்கப்பட்டன. இத்தகைய இக்கட்டான சூழலிலும் தமிழ் மாணவர்கள் தொடர்ந்தும் தேர்வுகளில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுப் பல்கலைக்கழக அனுமதி


நகரின் மத்தியில் ஓர் வித்தியாசமான புடவை மாளிகை
MILLENNIUM
SAREE PALACE
AS USUAL SAREES
UNUSUAL SELECTIONS
2003ம் ஆண்டிற்கான புதிய வரவுகள்
PURE SILK WEDDING SAREES
CASUAL SAREES
SALWAR KAMEEZ
CHUDIHAR
GARARA
SHORT-TOP-TROUSER
SHORT-TOP-BELL BOTTOM
FISH CUT - SUITS
SEE IT - ANYWHERE
CHOOSE IT - SOMEWHERE
BUY IT - HERE
மிலெனியம்
சாறி பலஸ்
1245 Ellesmere Rd, Scarborough, ON.
(Midland & Ellesmere)
Tel:416.750.9613

பெறுகின்றார்கள். இது தமிழ் மக்கள் கல்விக்குக் கொடுக்கும் முக்கியத்துவத்தையே காட்டுகின்றது. தேர்விலே மாணவர்கள் சிறந்த பெறுபேறுகளைப் பெறும்போது பெற்றோர் அடையும் மகிழ்ச்சியிலும் பார்க்க, இம் மாணவர்கள் பயின்ற அக்கல்லூரி இரட்டிப்பு மகிழ்ச்சியில் திழைக்கின்றது. இம்மாணவர்கள் குறிப்பிட்ட துறைசார்ந்த கல்வியைப் பெற்றுப் பட்டதாரிகளாகி பொறுப்புள்ள பல பதவிகளை வகிக்கும்போது சமூகத்தால் போற்றப்படுகின்றனர். இதன்மூலம் அவர்கள் தம் பெற்றோருக்கு மட்டுமல்ல தாம் கல்வி கற்ற பாடசாலைக்கும் நற்பெயரை ஈட்டிக் கொடுக்கின்றனர். இவ்வாறு கல்வியில் மேம்பட்டு சிறந்த கல்விமானாகத் திகழும் ஒருவர் தன் அறிவைத் தான்சார்ந்த சமூகத்தின் முன்னேற்றத்திற்கும், மேன்மைக்கும் பயன்படுத்த வாய்ப்பாகின்றது. இதனால் அவரது மறைவின் பின்பும் அச்சமூகத்தினரிடையே அழியாப் புகழ்பெறுகின்றார். இது கல்வியின் வழியாகக் கிடைக்கும் சிறப்பையே காட்டுகின்றது.

"கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு
மாடல்ல மற்ற யவை"

(குறள் - 400)

என்ற வள்ளுவர் வாக்கும் இங்கு நோக்கத்தக்கது.

புலம்பெயர்ந்த நாடுகளிலும் எமது பிள்ளைகள் கல்வித்துறையில் சிறப்புற்றுப் பல சாதனைகளைப் புரிந்துவருகின்றனர். ஆயினும் பெரும்பாலான மாணவர்கள் சமூகக்கல்லூரிகளில் படித்துப் பட்டம் பெறுவதுடன் தமது படிப்பை முடித்துக் கொள்கின்றனர். பொருளாதாரச் சூழலின் அடிப்படையில் வேலை செய்யவேண்டிய சூழ்நிலையில் இருந்தாலும் பகுதி நேர வகுப்புகளுக்குச் சென்று மேலும் உயர்படிப்பு மேற்கொண்டு, தமது தகுதிகளையும் உயர்த்தி, அதன் மூலம் வாழ்க்கைத் தரத்தையும் வளமாக்கிக்கொள்ள இந்நாட்டில் வாய்ப்புண்டு. 'கற்றது கைமண்ணளவு கல்லாதது உலகளவு' என்ற ஆன்றோர் வாக்கையும் நினைவிற் கொள்ளுதல் பயனுடையதாகும். இதனையே வள்ளுவர் பின்வரும் குறளில் விளக்கமாகக் கூறியிருக்கின்றார்.

' தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறும் அறிவு '

(குறள் -396)

எனவே இந்நாட்டில் எமக்குக் கிடைத்துள்ள வாய்ப்புக்களை நல்லமுறையில் பயன்படுத்தி கேடில் விழுச்செல்வமாகிய கல்வியிற் கவனம் செலுத்தி நல்லொழுக்கநெறியில் நின்று, தமது வாழ்க்கையில் முன்னேறுதல் மாணவரது கடமையாகும்.

**விமலா பாலசுந்தரம்**
பழைய மாணவி

*With Best Wishes From*

மாணவர்கள் முன்னணியில் வைப்பதில் சாதனை புரியும்

# V V TUTORING CENTRE

தன் வகுப்புகளை

- ☞ **Bellamy & Ellesmere**
  **(1095 Bellamy Road)**
- ☞ **Middlefield & Elson**
  **(28 James Edward Dr., Markham)**
- ☞ **Kennedy & Eglinton**
  **(2390 Eglinton Ave. East #204)**
- ☞ **Drew & Dixie**
  **(1808 Drew Road, Mississauga)**

▲ Science ▲ Biology ▲ Chemistry ▲ Physics ▲ Economics
▲ Finite Math ▲ Math ▲ Calculus ▲ Algebra & Geometry
▲ Acconting ▲ English ▲ ESL (English as a second Language)
▲ English Reading ▲ Social Studies ▲ French ▲ Computer Studies

ஆகிய பாடங்கள்

பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், ஒன்ராறியோவில் கற்பிப்பதற்கான தராதரம் பெற்ற, அனுபவமிக்க கனேடிய ஆசிரியர்கள் தராதரம் பெற்ற தொழில் நுட்ப வல்லுனர்கள் அடங்கிய ஆசிரியர் குழுவால் கனடிய பாடசாலைகளின் பாடத்திட்டப்படி கற்பிக்கப்படுகின்றன.
*வகுப்புக்கள் பிற்பகல், வார இறுதி, குறுகியகால கற்கை நெறிகளாக ஒழுங்கமைக்கப்பட்டுள்ளன.*

***பாடங்கள் புகட்டுவது மட்டுமல்ல! பல்கலைக்கழக வாயிலையும் திறந்துதருகின்றோம் எமது சகோதரத்தாபனம்***

## ONTARIO INTERNATIONAL INSTITUTE
## Ministry Inspected Private School

OSSD சான்றிதழ் வழங்க அங்கீகரிக்கப்பட்டுள்ளது

வகுப்புகள் ஆரம்பம்

செப்டம்பர் இரண்டாம் வாரத்தில்

தொடர்புகட்கு

**வீ.வீ.ரியூரறிங் சென்ரர்**

Tel: 416-701-1763
905-471-3084

(தயவு செய்து தொலைபேசியில் தங்கள் செய்தி விபரத்தைப் பதிவு செய்யவும்)

# நீங்காத நினைவுகள்

ஒரு சமுதாயத்தின் தேவை, வளர்ச்சி, நிகழ்வுகள். அனைத்தையும் படம் பிடித்துக் காட்டுவதுதான் அச்சமுதாயத்தில் காணப்படும் பாடசாலைகள். புதியதோர் சமுதாயத்தைப்பற்றி நாம் அறிய விரும்பினால் அங்குள்ள பல்வேறு கட்டிடங்களுக்குள் சென்று பார்ப்பதன் மூலமோ பரிசீலிப்பதன் மூலமோ யாம் அறிந்து கொள்வதை விட ஒரு பாடசாலையில் சென்று அங்கு நடைபெறுவனவற்றைச் சிலநாட்கள் அவதானிப்பதன் மூலம் நாம் அப்பாடசாலையைப் பற்றி மட்டுமல்ல அது அமைந்துள்ள சமூகத்தைப் பற்றிய அறிவினையும் பெற்றுவிடலாம். அந்தவகையில் இந்து மகளிர் கல்லூரி தான் அமைந்துள்ள சமூகத்தேவைகளுக்கேற்ப மகளிரை சமுதாயவியல்பினராக ஆக்கிக் காலத்திற்குக் காலம் சமுகத்திற்கு வழங்கிக் கொண்டிருக்கின்றது.

மலர்ச்சி காண விழைவது தானே மனிதப்பண்பு. இவ்வாண்டு செப்டம்பர் மாதத்தில் அன்னைக்கு 60 வயதென்போம். ஆனால் அவளோ தமிழை ஒத்த தலைவி. காலத்தால் மூப்பாளேயொழிய கவினில் அவள் என்றும் கன்னி. இளமை அழியாதவள். இளமைக்கோலம் அழியாது காப்பது தற்போது பாடசாலையுடன் தொடர்புடையவருக்கு மட்டுமல்ல பழைய மாணவிகள் ஆசிரியர்கள் மற்றும் நலன்விரும்பிகள் அனைவரினதும் தலையாய கடமையாகும். அந்தவகையில் எமது மன்றமும் ஆண்டுதோறும் அவ்வன்னையின் நினைவாக பல நிகழ்வுகளை நடாத்தி வருகிறது.

தனிமனிதவிருத்தி, சமுதாயமேம்பாடு, வளங்களின் அபிவிருத்தி, நாட்டுமுன்னேற்றம், உலகின் உயர்ச்சி, யாவற்றிற்கும் அடித்தளமாக அமைவது கல்வி. கல்விக்கண்களைத் திறப்பவன் காலமெல்லாம் நினைவுகூரத்தக்கவன். இந்தவகையில் இந்து மகளிர் கல்லூரி கல்வி வளர்ச்சியில் சிறந்து விளங்குகின்றது என்றால் அங்கு பயிலும் மாணவர்களினதும் கடமையாற்றும் ஆசிரியர்களினதும் அதிபர்களினதும் பெற்றோர்களினதும் இயல்பான திறமையும் ஊக்கமும் அயரா உழைப்புமேயாகும்.

முயற்சி திருவினையாக்கும் என்னும் முதுமொழிக்கேற்ப அரிதின்முயன்று கல்வித்துறையில் பெரிய சாதனைகளை இந்து மகளிர் கல்லூரி நிலைநாட்டியதற்குக் காரணம் அவ்வக்கால அதிபர்களினால் ஆற்றப்படும் சேவையாகும். தொலைநோக்குடன் நீண்டகாலப் பயன்பாடு கருதிச் சேவைசெய்த நற்பெருந்தகை அதிபர் பத்மாவதி இராமநாதனால் நெறிப்படுத்தப்பட்ட காலம் வரலாற்றில் குறிப்பிடத்தக்க ஒரு பொற்காலம் எனலாம். அக்காலம் பற்றிய எனது அனுபவத்தினை உங்களுடன் பகிர்ந்து கொள்ளவிழைகின்றேன்.

நிமிர்ந்த நன்னடை, நேர்கொண்ட பார்வை, பாடசாலையில் என்னென்ன மாற்றங்களை, முன்னேற்றங்களை எவ்வெத்துறையில் ஏற்படுத்த வேண்டுமென்ற சதா நினைவுகளுடன் நடுத்தோட்ட விநாயகரை வழிபட்டு நாளாந்தக் கடமைகளை ஆரம்பிக்கும் இவரது ஆளுமையே தனிச்சிறப்பு வாய்ந்தது.

ஏலவே வளர்ச்சி கண்ட கலைத்துறை,ஆங்கிலத்துறையுடன் இவரது காலத்தில் விஞ்ஞானத்துறை, கணிதத்துறை, வணிகத்துறை, நுண்கலைத்துறை, விளையாட்டுத்துறை, கீழைத்தேய மேலைத்தேய கலப்பு வாத்தியக்குழு ஆகியவைகள் வியக்கத்தக்க வளர்ச்சியைக்கண்டது. பல்துறையிலும் ஏற்பட்ட இவ்வளர்ச்சியும், மருத்துவ முகாமைத்துவ வணிக கலைப்பீடங்களுக்கு அதிகளவு மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டு பல்கலைக்கழகங்களுக்குச் சென்றமையுமே இக்கல்லூரியின் பொற்காலம் ஆகியது. அதுமட்டுமல்லாமல் மாவட்ட ரீதியாக நடைபெற்ற இசை, நடன, நாடகப் போட்டிகளிலும் பங்குபற்றி வெற்றியீட்டியமையும் நினைவுகூரத்தக்கன.

கம்பீரமான நடையுடன் கல்லூரியைச் சுற்றிவரும் போதே வகுப்பறையில் நடைபெறுவனவற்றைப் பற்றிய கண்ணோட்டம் எடுத்து விடுவார். அன்புடன் கூடிய கண்டிப்பும், கரிசனையும் கொண்டு மாணவர்களை அன்னைபோல் அணைத்தவர். இதையிதை இவரிவரிடம் கொடுத்தால் இன்னஇன்ன விதமாக திறம்பட செயற்படுத்த முடியும் என்ற தீர்க்கமான சிந்தனையைக் கொண்ட ஆளுமையுடன் ஆசிரியகுழாத்தை நெறிப்படுத்தும் திறமை இவரது வெற்றிக்கு வழிவகுத்தது. தனது மாணவச்செல்வங்களையே ஆசிரியர் குழாத்தில் அங்கத்துவராகக் கொண்டமையும் அவர்கள் இவரின் வெற்றிக்குக் களம் அமைத்தவர்கள் என்பதும் மறக்கமுடியாததொன்று.



*Best Wishes For Sakthi 2003*

# Math Tuition

ஒன்ராறியோவின் பிரபல பாடசாலையில் புதிய
பாடத்திட்டத்திற்கமைய Math கற்பித்து, மிகச்சிறந்த
பெறுபேறுகளை ஈட்டிக் கொடுத்த ,
கொடுத்துக்கொண்டிருக்கின்ற
ஆசிரியர் **Yoha Balasingam** அவர்களால்
நடாத்தப்படும் பிரத்தியேக கணித வகுப்புக்கள்

**Are you going to take the following courses in 2003 or after?**
**To obtain an excellent result, you could join these classes now:**

| | |
|---|---|
| **MATH:** | **Grades 10 & 11** |
| **Functions & Calculus:** | **Grade 12** |
| **Geometry & Discrete Math** | **Grade 12** |

## Call: 416-286-2000

## SoluTek

**கணனிச்சேவை**

உங்கள் கணனி (Computer) வேலைகளுக்கு நாடவேண்டிய ஸ்தாபனம். உங்கள் வீடு வந்து குறிக்கப்பட்ட நேரத்தில் (By appointments) அனைத்துவிதமான திருத்த வேலைகளும் எங்கள் கை தேர்ந்த பொறியியலாளர்களால் நியாயமான விலையில் செய்து தரப்படும்.

**புதிய அல்லது பழைய கணனிகள் வாங்குதல்**
**கணனித் திருத்த வேலைகள்**
**வியாபார ஸ்தாபனங்களின் வலைப்பின்னல் (Networking) வேலைகள்**
**மென்-கணனி கணனிப்படுத்தல் (Software/Programs Installations)**
**வியாபார ஸ்தாபனங்களுக்கு தேவையான விளம்பரங்கள் (Flyers) தமிழிலும் ஆங்கிலத்திலும் மற்றும், உங்களுக்கு உங்கள் கணனிகளை உபயோகிக்க உங்கள் வீடுகளிலேயே கற்றுத்தரப்படும்**
**அடிப்படையாக கணனியை உபயோகிக்கும் பயிற்சி**
**சாதாரணமாக வரக்கூடிய பிரச்சினைகளைக் கையாளுதல்**
**ஆங்கில/தமிழ் கடிதங்கள் அடித்தல்**

**(416) 726-6259 or (416) 648-6492**

அக்காலத்தில் விடுதியில் மாணவிகள் தங்கிப்படிக்கும் வசதி இருந்தது. வதிவிடவசதி கல்வி வளர்ச்சிக்கும், கல்விசார் நடவடிக்கைகளின் வளர்ச்சிக்கும் காரணியாக அமைந்தது. எல்லாவற்றிற்கும் மேலாக நடுத்தோட்ட விநாயகரது தெய்வானுகூலம் அம்மாணவர்களுக்கு எப்போதுமே இருந்தது. கோயிலே வீடாக அமைந்தமை அவர்கள் செய்த பாக்கியம். காரைதீவு, நயினாதீவு, புங்குடுதீவு, மண்டைதீவு, கிளிநொச்சி, சாவகச்சேரி பளை போன்ற தூர இடங்களிலிருந்த மாணவர்கள் விடுதியில் தங்கிப் படித்தனர். பெற்றோரைப் பிரிந்து வந்திருந்த இளஞ்சிறுமிகளுக்கு விடுதியில் வழங்கப்பட்ட உணவு பிடித்ததோ, பிடிக்கவில்லையோ அதிபரின் நேரிடை மேற்பார்வையும், நெறியாள்கையும், அன்பும், ஆதரவும், கவனமும், கரிசனையும், வீட்டுச்சூழலையும் மறந்து கல்வியில் கவனமும், கோயிலிற் தொண்டும் செய்வதற்கு வாய்ப்புக்கிட்டியது. அத்துடன் அல்லாது புனருத்தாரணம் செய்யப்பட்டு குடமுழுக்குச் செய்து *கும்பாபிஷேகம்* செய்த கோயிலாகச் சிறப்புற்றமையும் மறக்க முடியாத நிகழ்ச்சியாகும்.

இந்து மகளிர் கல்லூரி வளம் பெற்று மிளிர்வதற்கு 1975ல் உருவாக்கப்பட்ட யாழ் பல்கலைக்கழகமும் முக்கிய காரணம் எனலாம். தேவைகள், தேடல்கள் அனைத்தும் பல்கலைக்கழக மாணவர்கள், விரிவுரையாளர்கள், பேராசியர்களிடம் பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்புகள் பாடசாலையின் வளர்ச்சிக்கு மெருகூட்டியது.

செல்வி பத்மாவதி இராமநாதனைத் தொடர்ந்து அதிபர் பொறுப்பை ஏற்று திறம்படப் பாடசாலையை நிர்வகித்த பெருமை திருமதி திவ்வியசிரோன்மணி நாகராசாவுக்குரியது. அதிபர் இராமநாதனின் காலத்தில் முதலாந்தரப் பாடசாலையாக இருந்த இந்து மகளிர் கல்லூரி திருமதி நாகராசாவின் காலத்தில் இவரினதும் சகஆசிரியர்களினதும் மன்றங்களினதும் அயரா உழைப்பால் தேசியமட்டப் பாடசாலையாக உயர்வு பெற்றமை குறிப்பிடத்தக்கது. அத்துடன் இவர் கொத்தணி அதிபராகவும் கடமையாற்றினார். இவரே கல்லூரியின் பொன்விழாக் கண்ட அதிபருமாவார்.

இவரது காலம் யாழ்ப்பாணம் தள்ளாடிய காலம். சீர்கெட்டிருந்த காலம். கருமுகில் தோன்றி மழைபொழியுமா என வானத்தைப் பார்க்காது, வானத்தில் குண்டுவிமானங்கள், கெலிக்கொப்டர்கள் பறந்து பறந்து குண்டுமாரி பொழிந்த காலம். ஞாலத்தில் நிம்மதியாக வீடுவாசலில் பிள்ளைகளை - இளைஞர், யுவதிகளை வைத்திருக்க முடியாத காலம். பாடசாலைக்கோ, ரீயூசனுக்கோ போன பிள்ளைகள் வீடு வந்து சேர்வார்களா, அல்லது படையினர் பிடியில் சிக்கித்தவிக்கிறார்களா என்று தவித்த காலம். இக்காலகட்டத்தில் சில ஆசிரியர்கள், மாணவர்கள் இடம்பெயர்ந்து சென்ற நிலையிலும் திருமதி நாகராசா அவர்கள் மீதமுள்ள ஆசிரியர்களின் உதவியுடன் சமூகமளிக்கும் மாணவர்களுக்குப் பாதுகாப்புடன் கல்விபயில ஏற்பாடுகள் செய்துகொடுத்தார்.

இவ்விரு அதிபர்கள் நிர்வாகம் செய்த காலத்தில் நான் யாழ். இந்து மகளிர் கல்லூரியில் கல்வி கற்பித்தமையைப் பெரும்பேறாகக் கருதுகிறேன். இக்கல்லூரி மேன்மேலும் சிறப்புற வளர நடுத்தோட்ட விநாயகரின் துணைகொண்டு மாணவர்கள், ஆசிரியர்கள், அதிபர், பழைய மாணவர்கள், பெற்றோர்கள் அனைவரும் சேர்ந்து உழைப்போமாக.

**திருமதி. நீலா நகுலேசபிள்ளை**
முன்னாள் ஆசிரியை

# விழிப்பு

## தேவகி முனீஸ்வரராஜா



ரவியின் உடல் அந்த மண்டபத்தில் வளர்த்தப்பட்டு இருந்தது. மனைவி சியாமளா கதறிக் கொண்டு இருந்தாள். பிள்ளைகள் இருவரும் தாயைக் கட்டிக் கொண்டு அழுவதும், தாயைச் சமாதானப் படுத்த முயலுவதுமாக இருந்தனர். இரு பிள்ளைகளும் ஓரளவு வயதிற்கு வந்துவிட்டனர். என்றாலும் பெரிய பொறுப்புக்கள் எல்லாம் இனித்தானே நிறைவேற வேண்டும்.

ரவிக்கு ஒன்றும் பெரிய வயதாகிவிடவில்லை நாற்பது வயதும் ஒரு வயதா? ஏன் இந்த அவசரம்? இல்லை அவன் அவசரப்படவில்லை. விதிதான் அவசரப் பட்டுவிட்டது. அதற்கு அவளது பொறுப்புக்கள் எதனைப் பற்றியும் எந்தக் கவலையும் இல்லை. சிறு வயதுதானே... இன்னும் கொஞ்சம் அனுபவிக்கட்டும்... விட்டுப் பிடிப்போம் என்ற தாட்சண்யமும் இல்லை... குடிபோதையில் நிலைதடுமாறி வாகனம் செலுத்திய ஒரு முட்டாளின் மூலமாக ரவியின் உயிரைப் பறித்துக் கொண்டது. இதில் என்ன வேடிக்கை என்றால் குடித்துவிட்டுப் போதையில் இருந்தவன் உயிருடன் இருக்க ஒழுக்கத்துடன் வாகனம் செலுத்தியவன் இறந்துவிட்டான். விதிக்கும் ஓரவஞ்சனை.. இது எந்த விதத்தில் நியாயம்?

ரவி சியாமளா கனடா வந்த காலத்தில் இருந்தே படிப்பு, உழைப்பு என கஸ்டப்பட்டு வாழ்க்கையில் வளர்ந்து வந்தவர்கள். உதவிக்கென யாருமே இல்லாத காரணத்தால் பிள்ளைகளைக் கூட பராமரிப்பு நிலையங்களில் விட்டுவிட்டுத்தான் வேலைகளுக்குச் செல்வார்கள். அவசரம், அந்தரமான நேரங்களில் அந்நியோன்னியமாகப் பழகிய அயலவர்கள் உதவி செய்தார்கள். ஒரு தாயின் வயிற்றில் பிறந்து வளர்ந்த சகோதரர் அந்நியர் போல இருக்க, நாடு, மொழி, என வேறுபட்ட அந்நியர்கள் உறவாக உதவிசெய்தார்கள். இது கனடாவில் சகஜம்தானே.

சியாமளா புத்திசாலியான, உசாரான பெண்ணாக இருந்தாலும் இரு பிள்ளைகளது எதிர்காலத்தையும் எப்படித் தனித்து நின்று ஒரு நிலைக்குக் கொண்டு வரப்போகின்றாள்? துக்கம் விசாரிக்க வந்தவர்களின் கேள்வியும் கவலையும் இதுவாகத்தான் இருந்தது. திடீரென ஐயோ... ரவி.. போயிற்றியோ... என்ற அலறல் கேட்டது. ரவியின் அண்ணா குமார் நெஞ்சில் அடித்து அலறிக் கொண்டு ஓடிவந்தான். குமாரைத் தொடர்ந்து வந்த அவர்களது மாமா. வயது போன நான் இருக்கேக்கை நீ இப்படிப் போயிற்றியே என்று விசும்பினார். குமார் ஏதேதோ பிதற்றிப் பிதற்றி அழுது கொண்டே இருந்தான். அவனை எவராலும் சமாதானப்படுத்த முடியவில்லை. அவனது சோகம் உண்மையாகப்பட்டது. குமுறல் இதயத்தைப் பிளிவதாக இருந்தது. எல்லோர் கண்ணிலும் அது கண்ணீரை வரவழைத்து விட்டது. தானாடவில்லை என்றாலும் சதையாடும் என்றது போல சகோதரனை இழந்து பாசத்தில் துடித்தான். பிரிவில் வேதனை உறவின் பெருமை அவனுக்கு இப்போதுதான் புரியத் தொடங்கியது போலும். ஆனாலும் நேரம் தாழ்ந்து விடவில்லையா? கண்கெட்டுப் போய்விட்டதோ... சூரிய உதயத்தை இனிப் பார்க்கவே முடியாதே...

இந்தப் பாசம் ரவி உயிருடன் இருந்தபோது எங்கு போனது? ஒரு தட்டில் உணவருந்தி, ஒரு பாயில் படுத்துறங்கி, ஒன்றாக விளையாடித்திரிந்து வளர்ந்த அந்தப் பாசம் பெரியவர்களானதும் ஏன் போட்டி பொறாமை என்று மாறிவிட்டது. ஒன்றுமில்லாத விடயங்களுக்கெல்லாம் நான் பெரியவன், நீ உதவாக்கரை என திமிராகப் போட்டி போட்டு அவரவரது நிம்மதியைக் குலைத்த உறவுகள் பிரிவில் மட்டும் வந்து பாசத்தைப் பொழிவது ஏன்? இதனால் யாருக்கு என்ன லாபம்? ரவி, குமார் குடும்பங்கள் பல வருடங்களாக எந்தத் தொடர்பும் இன்றி பிரிந்தேதான் இருந்தது. இன்று உன் பாசத்தை நான் புரிந்து கொண்டேன். உன் பிரிவை என்னால் தாங்க முடியவில்லை. உன்னை என் பாசத்தால் அணைப்பேன் எழுந்துவா.. என குமார் கதறியும் ரவியினால் எழுந்து வரமுடியவில்லை.

அன்று எட்டுச் செலவு. நெருங்கிய உறவினர், நண்பர்கள் ரவி வீட்டில் கூடியிருந்தனர். குமார் ஒரு அறையில் தனியாக இருந்து ரவியுடன் தான் கழித்த இனிய நாட்களை நினைத்துக் கொண்டிருந்தான். ரவியினது நல்ல குணங்கள் செய்கைகள் மட்டுமே குமாரின் மனதில் தோன்றிக்

கொண்டு இருந்தன. என்னடா இது? ரவி உயிருடன் இருக்கும் போது அவனுடன் நடந்த தகராறுகளை மட்டுமே நினைவில் கொண்டு தூரவிலகி நின்ற குமார் இறந்தபின் ரவியின் நல்ல குணங்களை மட்டுமே நினைக்கின்றான். இவற்றை முன்னரே நினைத்து பகையை உறவாகக் களித்திருந்தால்.. குமாரின் விழிகளில் இருந்து கண்ணீர் தாரையாக வழிந்தது.

குமார் அறையில் இருப்பது தெரியாமல் அடுத்த அறையில் இருந்த ஒருவர் சொன்னார். செத்த வீட்டில அந்தத் தமயன் வந்து குழறியதைப் பார்த்தனீங்களே? எனக்கும் மனசுக்கு சரியான கஷ்டமாகத்தான் இருந்திச்சு. ஆனால் இவைக்கெல்லாம் திமிர்... எனக்கு நீ தேவையில்லை... உனக்கு நான் தேவையில்லை எண்டு பெரிசாத் திரிவினம். ஆனா அவையின்ர சகோதர ஒற்றுமையைப் பார்த்து அடுத்தவை சிரிக்கினம் என்று அவைக்குத் தெரியாது. குமாருக்கு வேதனையுடன் வெட்கமாகவும் இருந்தது. அவனுக்கு முன்னால் இருந்த ஒருவர் அற்பப்பபதரைப் பார்ப்பதுபோல அவனைப் பார்த்தார். அந்தப் பார்வையில் கேலி இருந்தது. கேவலம் இருந்தது... குமாரினால் தாங்க முடியவில்லை. மெதுவாக எழுந்து பின்னால் சென்று விசும்பினான்.

சே... ரவியைப் பிரிந்து நானும் சந்தோசமாக இருக்கேல்லை. நல்ல நாள் பெரிய நாளுக்குக் கூட நாங்கள் ஒண்டாக சந்திக்கேல்ல.. அப்படி இருந்து என்னத்தைப் பெரிசா சாதிச்சிட்டன்... இப்ப அவனும் இல்லை.. செரிஞ்சவையும் நேர காணேக்க சிரிச்சுக் கதைச்சாலும் உண்மையா எங்களை மதிக்கேல்லை எண்டு விளங்குது. அடுத்தவரிட்ட இருந்த குறையைத்தான் மாறி மாறி பாத்தனாங்களே தவிர நல்ல விஷயங்களைக் கவனிக்கவில்லை. ம்.. இப்ப நினைச்சு என்ன பிரியோசனம்? என்ர வாழ்நாள் முழுக்க இது ஒரு குற்ற உணர்வாயே என்ர மனசில இருக்கப் போகுது. என்று குமார் தவித்துப் போய்விட்டான். ரவி இறந்த சோகத்தை விட அவனது பிரிவை விட கடைசிக் காலங்களில் அவனுடன் எந்தத் தொடர்பையும் வைத்திருக்கவில்லை என்ற கவலைதான் குமாரை வாட்டி வேதனைப் படுத்தியது. தன்னையும் அறியாமல் ஓ... என்று அழுதான்.

இவன் சத்தத்தைக் கேட்ட மாமா ஓடிவந்தார். அவனை அரவணைத்து ஆறுதல் சொன்னார். இஞ்ச பார். குமார் நடந்து முடிஞ்ச கதை உன்னால மாத்த ஏலாது. அந்தக் காலத்தில அண்ணன் தம்பி என்னடா ஆளுக்காள் என்ன மரியாத என்ன ஒற்றுமை... இப்ப நீங்களெல்லாம் அப்பிடியில்லை... சரி அத விடு.. இனிமே நடக்க வேண்டியதைப் பார்... இனிமேலாவது மற்றவரைப் புரிஞ்சு விட்டுக் கொடுத்து சொந்த பந்தங்களைப் பேணி, அறிஞ்சவைக்கு உதவிசெய்து வாழப்பாருங்கோ...

இஞ்ச யாரும் நூற்றுக்கு நூறு சரியா நடக்கிறதில்லை. நாங்க என்ன கடவுள்களே... மனுசங்கள்தானே.. பிழைகள் விட்டுக் கொடுத்து திருந்தி நடக்கப் பார்க்கிறதுதானே... இஞ்ச பார் போகக்கை ரவி என்னத்தைக் கொண்டு போயிற்றான். . சரி.. சரி.. இருட்டுக்குள்ள இருக்காமல் எழும்பி வா.. என்றபடி மாமா உள்ளே சென்றுவிட்டார்..

குமார் சிந்திக்கத் தொடங்கினான். இறப்பு கூடுதலாக முதுமையை நாடிவந்த காலம் போய் இன்று எம்மை எந்த நேரமும் அணுகலாம் என்று எமக்குப் புரியவைத்துள்ளது. எம்மையும் அறியாமல் எமது கட்டுப்பாட்டுக்குள்ளும் அடங்காமல் விபத்துக்கள், இயற்கை அழிவுகள், நாச வேலைகள், வித விதமான புதிய நோய்கள் எனத் தினமும் ஏதோ ஒன்று எம்மை விரட்டிக் கொண்டேதான் இருக்கின்றது. எப்படி என்றாலும் வாழ்வோம்... பின்னர் ஒரு நேரத்தில் எம்மைத் திருத்திக் கொள்ளலாம் என்பதற்கு நாம் ஒன்றும் ஆயிரம் ஆண்டுகள் வாழப்போவதில்லை. எந்த நிமிடத்திலும் எதுவும் நடக்கலாம் என்ற உண்மை எமக்குத் தெரிகின்ற போது இருக்கின்ற ஒவ்வொரு நிமிடத்தையும் நாம் பிறருடன் அன்பாகவும் சந்தோஷமாகவும் கழித்தால் என்ன?

குமாரின் மனம் தெளிவுபட்டது.. மெதுவாக எழுந்து வெளிச்சத்தை நோக்கி வீட்டுக்குள் சென்றான்.

# A1 Tutors

*Small Group and One-on-One Tutoring for Grades K -12, University and College*

**(416) 422 2700**

**a1tutors.ca**


Suite 33, 747 Don Mills Road (near Ontario Science Center by Don Mills & Eglinton Intersection)

## தரமான கல்விச் சேவை, ஏனென்றால்:

- ♦ கனேடிய பாடசாலைகளில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களால் நடாத்தப்படும் வகுப்புகள்
- ♦ தாய், தந்தையினரது எதிர்பார்ப்புகளையும் மாணவர்களுக்குரிய அணுகுமுறையையும் புரிந்து கொண்ட தமிழ் நிர்வாகம்
- ♦ உங்கள் குழந்தைகளின் முன்னேற்றத்தை அறிய மாதாந்த progress reports
- ♦ $3 /hour இலிருந்து ஆரம்பிக்கும் மிக குறைந்த விலைகள்
- ♦ வசதியான வகுப்பறைகள்
- ♦ Class notes, handouts & Regular homework assignments
- ♦ School homework assistance
- ♦ உங்கள் குழந்தைகளின் கணித, வாசிப்பு, எழுத்துத் திறமையை அதிகரிக்க Math Forte, Reading Forte மற்றும் Writing Forte வகுப்புகள்
- ♦ மேலும், தகுதி மிக்க ஆசிரியர்களால் Grades 6 to 12 வரையிலும் இலவச வகுப்புகள்

*Why wait?*

*Enroll Now. (416) 422 2700*



---

# குடும்ப பல் வைத்தியர்
# Family Dentist

## டாக்டர் விஜயகலா சிவதேவன்
## Dr. Vijayakala Sivathevan

*Dental Surgeon*

Markham - Ellesmere Dental Office

- ✷ கிளிப்போடுதல்
- ✷ பல் கட்டுதல்
- ✷ சகல பல் வைத்திய சேவைகளும்
- ✷ Cosmetic Dentistry
- ✷ Gum Treatment
- ✷ Dentures
- ✷ Orthodontics
- ✷ Crown & Bridges
- ✷ Root Canals
- ✷ Surgery

சகலவிதமான பல் வைத்திய சேவைகளுக்கும் எல்லா காப்புறுதிகளும் ஏற்றுக்கொள்ளப்படும்

தமிழிலே உரையாடி உங்கள் சேவைகளைப் பெற்றுக்கொள்ளலாம்

**1200 Markham Road**
**Suite #119, Scarborough,**
**Ontario M1H 3C3**

**Tel: (416) 289-7187**
**Cell: (416) 892-0987**

# எங்கள் கல்லூரியின் சுவடுகள்

எங்கள் இனிய கல்லூரி அறுபதாம் ஆண்டில் அடியெடுத்து வைக்கும் வேளையில், அதன் வரலாற்று ஏட்டில் இற்றைவரை பதிக்கப்பட்டுள்ள பொன்னான சுவடுகளை அடையாளம் காணவேண்டி என் இதயவீணையை மீட்டிப் பார்க்க முயல்கின்றேன்.

யாழ். இந்துவில் பெண்கள் சின்னஞ்சிறு வயதினராகக் கூட்டுக்கல்வி பயின்ற சமயம் யாழ் இந்துவுக்கு அண்மையில் கஸ்தூரிவீதியில் திரு. பொன்னுச்சாமி என்னும் செல்வந்தரின் அழகிய இல்லமாகிய பொன்னாலயத்தில் பெண்கள் பிரத்தியேகமாகக் கல்வி பயில ஏற்பாடு செய்யப்பட்ட இனிப்பான தொரு செய்தி அறிந்து உள்ளம் குளிர்ந்தோம்.

1943ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 10ம் நாள் யாழ். இந்து மகளிர் கல்லூரி ஆரம்பிப்பதற்கு சிறுமிகளாகிய நாம் யாழ். இந்துவில் இருந்து மெல்ல அடியெடுத்துப் பொன்னாலயம் வந்து சேர்ந்தோம். அன்று கல்லூரியில் கற்பித்த ஆசிரியர்கள் எண்மர் மாத்திரமே. ஆனால் மாணவிகள் தொகை 110 வகுப்புக்கள் நான்கு தொடக்கம் எட்டு வரையுமே நடத்தப்பட்டன.

கல்லூரியின் முதல் அதிபராகப் பொறுப்பேற்ற திருமதி காயத்திரி கணேசன் அவர்கள் கண்டிப்பு நிறைந்தவர். கல்வி புகட்டுவதில் கவனம் செலுத்தியதுடன், ஒழுக்கமும் பிரதானம் என்ற உயரிய கொள்கைளையும் அன்றே மாணவர் மனதினில் பதிக்கப்பட்டது. முத்தமிழ் வளர்ச்சிக்கும் வித்திட்டார். இசை நடனம் ஆகிய கலைகளை மாணவர் ஆர்வத்துடன் பயின்றனர். பூப்பந்து, வலைப்பந்து ஆகிய பல்வகை விளையாட்டுக்களும் அறிமுகப்படுத்தப்பட்டன. நிமிர்ந்த நன்னடையும் நேர்கொண்ட பார்வையும் நிமிர்ந்த ஞானச் செருக்கும் உடையவராகப் பாரதியார் கண்ட புதுமைப்பெண்களாக வாழ அறிவுறுத்தப்பட்டோம்.

1944ம் ஆண்டு மாசிமாதம் 27ம் நாள் பல்வேறு பாடசாலைகளில் இருந்தும் பலர் எங்கள் கல்லூரியை நாடி அணிவகுக்கத் தொடங்கியது கல்லூரிக்குப் பெருமை

இடநெருக்கடி காரணமாக யாழ். இந்து விளையாட்டு மைதானத்திற்கு மெல்ல நகரவேண்டியதாயிற்கு. செம்மண் தரையுடன் கூடிய தென்னங்கீற்றுக் கொட்டில்கள் தான் வகுப்பு அறைகள் எனிலும் வகுப்புக்கள் சிரேஷ்ட தராதரப் பத்திர வகுப்புவரை இயங்கத் தொடங்கி மாணவர் தொகையும் ஆசிரியர் எண்ணிக்கையும் அதிகரித்தன.

தாய் நாட்டிலிருந்து வந்த செல்வி முத்து அச்சையா அதிபரானார். இந்துசமயக் கலாச்சாரத்திற்கு ஏற்ற கணைக்கால் வரையிலான நீளப்பாவாடையை மாணவிகள் விரும்பி அணிந்தனர். மாணவிகள் ஆடல்பாடல்களில் பங்கு பற்றி ஆற்றல் மிக்கவராகத் திறமை பெற்று ஆசிரியைகளின் சிறப்பான வழிநடத்தலினால் முன்னணியில் நிற்கும் ஏனைய கல்லூரி மாணவிகளுக்கு நிகராக யாழ். நகர மண்டப அரங்கில் கலைநிகழ்ச்சிகளில் பங்குபற்றி புகழேணியில் கால்வைத்தனர். கலையுலகிலும் ஒரு ஆரோக்கியமான எதிர்காலம் உண்டு என்பது அன்றே வெளிப்படையாயிற்று.

வளர்ந்துவரும் இந்து மகளிர் சமுதாயத்தை அறிவளவிலும் உச்ச நிலைக்கு வளர்த்தெடுக்க வேண்டும் என்ற உயரிய சிந்தனையுடன் எம்முடைய நலம் பேணக் கைகொடுத்தவரும் ஒரு பெண்மணியே. யாழ். நகரில் பிறவுண்வீதியில் வாழ்ந்த சட்டத்தரணி ஆர். சிவகுருநாதரின் தர்ம பத்தினி அன்னை விசாலாட்சி அம்மையார் அவர்களே எங்கள் கல்லூரி ஸ்தாபகர் என்ற பெருமைக்கு உரியவர்.

அரசடிவீதியில் தமக்கே உரித்தாக இருந்த 24 பரப்பு நிலப்பரப்பைக் கல்லூரிக்கு அன்பளிப்பாகத் தர அவர்தம் கணவரும் உறவினரும் சேர்ந்து 16 பரப்பு நிலப்பரப்பை நன்கொடையாக ஈந்து உதவியது பழம் நழுவிப் பாலில் விழுந்தது போலாயிற்று

அம்மையாரின் நல்ல சிந்தனை வெற்றிபெறக் கல்லூரி அதிகார சபையினரும் கைகொடுத்தனர். கல்லூரி வளவில் ஏற்கனவே எழுந்தருளியிருந்த விநாயகப் பெருமானின் இன்னருளும் துணைசெய்தது.

1945ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 7ம் நாள் அரசடி வீதியில் கல்லூரி நிரந்தரமான நிலைத்து நின்றது. அறிவுச் சுடர் பரப்பக் கல்லூன்றிய நாளாகும் அன்றே விஞ்ஞான கூடத்திற்கும் அடிக்கல்

Your *Dreams*
are our *Reality*
for all your *Blinds & Drapes*

**YARL**
**WINDOW BLINDS**
**& DRAPERY**

5210 Finch Ave. East
Unit #3, Scarborough
Ontario M1S 4Z6

**Tel: 416-332-8482**
**416-419-9247**
www.yarldrapery.com

சக்தி 2003 சிறப்புற நடைபெற எங்கள் வாழ்த்துக்கள்

# MRI Super Painting

உங்கள் இல்லத்தினை அழகுபடுத்தும் சகலவிதமான திருத்த நிர்மாண வேலைகளையும், உரிய நேரத்தில் திருப்தியான முறையில் செய்து தர அழையுங்கள்

- **Painting**
- **Basement Renovation**
- **Flooring Etc.**

- இலவச மதிப்பீடு
- நியாயமான விலை
- திருப்தியான தரமான வேலை

**Raj: 416-299-3633**
**416-618-4584**

நாட்டப்பட்டது.

கல்லூரி மைதானத்தில் இன்று காணப்படும் உயரிய கட்டடங்களையோ மேல்மாடிகளையோ அன்று எண்ணிப்பார்க்கவும் முடியவில்லை. வகுப்பறைகள் யாவும் கிடுகுகளினால் வேயப்பட்டனவாகவும், தரை வெண்மணற் பரப்பாகவுமே இருந்த பொழுதிலும் நல்லொழுக்கம் என்னும் உரம் இட்டு விடாமுயற்சி என்னும் நீர் பாய்ச்சி அறிவுப் பயிரை வளர்த்தெடுத்துக் கடமை உணர்ச்சி மிக்க மாணவ சமுதாயத்தை உருவாக்கியவர் அன்றைய அதிபர்களும் உப அதிபர்களும் ஆசிரியைகளுமே என்று திட்டவட்டமாகக் கூறமுடியும்.

1946 தொடக்கம் 1948 வரை கல்லூரி பிரபல்யம் அடைவதற்கான பச்சை நிற விளக்கு ஒளி வீசத் தொடங்கியது. அமெரிக்கப் பெண்மணி திருமதி கிளேறா மெற்வாணி அதிபரானார். ஆங்கில மொழியைக் கற்பிப்பதில் மாத்திரமன்றிக் கூடவே மொழியைப் பேசுவதிலும் ஆர்வம் காட்டினர் எங்கள் கல்லூரி மாணவிகள். 1947ம் ஆண்டு அமெரிக்க அதிபரின் நிர்வாகத்தின் பொழுது பழைய மாணவிகள் சங்கமும் உருவாகியது என்பது குறிப்பிடத்தக்கது. அதே ஆண்டிலேயே கல்லூரி விடுதியும் ஒழுங்காக நிர்வகிக்கப்பட்டதன் காரணமாக விடுதி மாணவர் தொகையும் நூற்றுக்கு மேலானது.

இது கல்லூரி வளர்ச்சியின் முதல்படியாகும். அடுத்ததாக கல்லூரி மேன்மேலும் புகழ் பெறத்தக்கதாக 1950ம் ஆண்டு நிர்வாகத் திறனுடைய இந்தியப் பெண்மணி திருமதி சறோஜினி ராவ் அதிபராகி மாணவர்க்குக் கட்டுப்பாட்டையும் ஒழுங்கையும் பயிற்றுவதில் கண்ணும் கருத்துமுடையவராகச் செயற்பட்டு, மாணவரின் முழுமையான தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில் நூலகமும் சிறப்பாக இயங்கி வளர்ச்சியுற ஆவன செய்தார்.

பல்கலைக் கழகம் புகுமுகவகுப்பு ஆரம்பமாகியதுடன் மனையியல் கைப்பணி ஆகிய பாடங்களும் போதிக்கப்பட்டன. இலக்கிய மன்றம் விஞ்ஞான மன்றம், புவியியல் மன்றம் இந்து மாமன்றம் ஆகியன யாவும் இயங்கத் தொடங்கின. சாரணியர் குழுவிலும் மாணவிகள் ஆர்வத்துடன் சேர்ந்து சமூகத்திற்கு உதவப் பயிற்சி பெற்றனர். மாணவர் தொகை (1000) ஆயிரத்துக்கும் மேலானது கல்லூரி 2ம் தரப் பாடசாலையாகத் தரம் உயர்த்தப்பட்டது.

திடமான உள்ளங் கொண்ட அதிபர் 1954ம் ஆண்டில் கல்லூரிக்கு நிதி சேர்க்கும் குறிக்கோளுடன் கல்லூரி அதிகார சபையினரும் ஏனைய பிரமுகர்களும் கைகொடுக்க, கண்கள் கழிப்புறத்தக்கவகையில் ஒரு களியாட்ட விழாவை ஒரு மாதகாலமாக நிகழ்த்திய வேளையில் சீட்டிழுப்பும் நடாத்திய பலனாகக் கல்லூரிக்குச் சுற்று மதிலும் கட்டப்பட்டது.

நாம் இங்கு கல்வி கற்பது அழகாக வாழ்வதற்கே என்பது கல்லூரிக்கு அதிபர் தந்த மகுடவாசகம்.அத்துடன் சீருடையும் அறிமுகமாயிற்று. கல்லூரி பிரபல்யம் அடையத் தொடங்க இந்து சமயப் பெற்றோர் தம் பிள்ளைகளை ஆவலுடன் கல்லூரியில் சேர்த்தனர்.

அத்தருணத்தில் உபஅதிபராகப் பதவி வகித்த திருமதி. விமலா ஆறுமுகம் அவர்கள் 1954 தொடக்கம் 1975 வரை அதிபராகப் பதவி உயர்வு பெற்றுப் பணிபுரிந்தார். இவரது காலத்தில் பல்கலைக்கழகக் கலைப்பிரிவுக்கு எங்கள் மாணவிகள் பெருமளவில் தெரிவு செய்யப்பட்டமை கல்லுர்ரிக்குப் புகழ் தேடியது. 1962ஆம் ஆண்டு கல்லூரி அரசாங்கத்திடம் கையளிக்கப்பட்டது. கல்லூரியின் வரலாற்றிலே ஒரு திருப்பு முனை. புதிய மாடிக் கட்டடங்களை நிர்மாணிப்பதற்கும் அழகிய பிரார்த்தனை மண்டபத்தைக் கட்டி முடிப்பதற்கும் அரசாங்கம் நிதி உதவி வழங்கியது. பழைய மாணவி ஒருவரின் நடன நிகழ்ச்சியும் தரமான நாடகங்களும் அரங்கேற்றப்பட்டுக் கூடுதலான நிதி திரட்டப்பட்டது. கல்லூரியின் 20ஆண்டு கால வளர்ச்சியில் கல்லூரி முதலாந்தரப் பாடசாலயாக உயர்த்தப்பட்டது முக்கிய இடம் பெறும். விசாலமானதொரு பிரார்த்தனை மண்டபம் நிறுவப்பட்டுப் பெருவிழா எடுத்து மகிழ்ந்ததும் மறக்கமுடியாத ஒரு விசேடநிகழ்வாகும். இன்று விசாலாட்சி மண்டபம் கல்லூரி வாயிலில் பேரழகுடன் புதுப்பொலிவு பெற்று எல்லோர் கவனத்தையும் கவர்கின்றது. இசை, நடனப் போட்டிகளும் பேச்சுப் போட்டிகளும் மாவட்டரீதியில் நிகழ வாய்ப்பழித்துக் கலைகளின் வளர்ச்சிக்கு ஆதாரமாக நின்று பயன்படுகின்றது. மாணவிகள் மெய்வல்லுநர் போட்டியிலும் முதலாம் இடத்தைப் பெற்று வலைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியிலும் வெற்றிக் கொடி உயர்த்திப்

*With Best Compliments From*

# MOKA MARKET

தரமான பொருட்கள்
மலிவு விலையில்

**Best Quality**
**Lowest Prices**

900 Rathburn Road West
Unit 5 & 6, Mississauga

**Tel: 905-273-4137**

**VISIT US OR CALL US FOR ALL YOUR REQUIREMENTS OF:**

- INDIAN AND SRI LANKAN GROCERY ITEMS
- INDIAN AND SRI LANKAN PRODUCTS
- SPICES
- GIFT ITEM

- DVD & VIDEO FILM RENTALS (TAMIL, TELUNGU, MALAYAM, HINDI AND SINHALA FILMS)

*With Best Wishes*

# BALAJI FOODS

**TROY, MICHIGAN**
**U.S.A.**

*we also supply home prepared Indian and Sri Lankan food - Take out and catering. Our specialty is chicken, mutton and vegeteble rolls*

**We are open: Mon to Sat 10 A.M. - 9 P.M.**
**Sunday 10 A.M. - 8 P.M.**

**61 Maple Road East**
**Troy, Michigan, U.S.A.**
(Maple - Livernois intersection
and opposite K-MART)

**Tel: 248-526-0427**
**Fax: 248-526-0893**
**URL: www.balajifoods.com**

புகழ் தேடினர்.

இந்த வெற்றியின் பின்னணியில் விளையாட்டுத் துறைக்குப் பொறுப்பாயிருந்த திருமதி லீலா. பாலசிங்கம் அவர்களையும் நினைவுகூரவேண்டியவர்களாகின்றோம்.

அவ்வேளையில் ஆசிரியராக இருந்து பின்னர் உப அதிபராகப் பதவி உயர்வு பெற்றுப் பல ஆண்டுகளாகக் கல்லூரிக்குப் பலவழிகளிலும் தோள் கொடுத்த திருமதி. ஆர். வைத்திலிங்கம் அவர்களையும் கல்லூரி நன்றியுடன் என்றும் போற்றும்.

செல்வி பத்மா இராமனாதன் 1952இல் கல்லூரி ஆசிரியையாக அறிமுகமாகி, உயர்தர வகுப்புக்கலைப்பிரிவினருக்கு பெரும் எண்ணிக்கையாகப் பல்கலைக்கழகத்திற்குத் தெரிவாகும் வகையில் ஏற்ற பொறுப்புக்களை நிறைவாகச் செய்து கல்லூரியின் தரம் உயரச் சேவை செய்யும் உப அதிபராகி 1976இல் அகில இலங்கை முழுவதும் கல்லூரியின் புகழ் பரவத் தக்கதான வகையில் ஆழுமைத்திறன் மிக்க அதிபராகக் கல்லூரியின் உயர்வே தன் உயிர் மூச்சு என்னும் உணர்வுடன் செயலாற்றிய காரணத்தால் கல்லூரியின் பொற்காலம் அதிபரின் நிர்வாகக் காலம் என்று புகழ்ந்து போற்றப்படுகின்றது. கல்லூரி உன்னதமான வளர்ச்சியைப் பெற்றுப் புகழேணியின் உச்சப்படியை அடைந்தகாலம் இது.

க. பொ. த உயர்தர வகுப்பில் மருத்துவதுறைப் பகுதிக்கும் அனுமதி பெற்ற மாணவிகளின் தொகை அதிகரித்தது. விஞ்ஞான விடைப் போட்டிகளில் உயர்தர வகுப்பு மாணவிகள் 1ம் இடத்தைப் பெற்றும் மாவட்ட ரீதியில் நிகழ்ந்த இசை, நடனம், நாடகம், ஆகிய போட்டிகளிலும் புதிய ஆக்கம் என்ற நவீன நாடகத்திலும் முதலாம் இடத்தைப் பெற்றதும் தங்கப் பதக்கம் பெற்றதும் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது.

இவர் கண்டிப்பான அதிபராகக் கடமையாற்றிக் கல்லூரி மாணவிகளின் கல்வித்தரத்தை உயர்த்தவேண்டிய உத்திகளைக் கையாண்டு வெற்றிபெறச் செய்தார். மாணவிகள் மேற்கத்திய வாத்தியங்களை மீட்டப் பயின்று விளையாட்டுப் போட்டி நிகழ்ந்த பொழுதெல்லாம் அணிவகுப்புக்கு முன் வரிசையில் பாண்ட் இசை விருந்து கண்ணுக்கும் செவிக்கும் இனியவிருந்து. கல்லூரியில் கற்ற மாணவர் தொகை 2000 ஆகவும் ஆசிரியர் தொகை 75 ஆகவும் அதிகரித்தது.

அகில இலங்கை ரீதியில் மெய்வல்லுனர் போட்டியில் 1ம் இடத்தைப் பெற்றதும் பூப்பந்து ஆட்டத்தில் கல்லூரி வீராங்கனைகள் வெற்றியெய்தியதும் கல்லூரிக்குப் பெருமை. அவ்வேளை உடற்பயிற்சி ஆசிரியையாக இயங்கிய திருமதி. ரதி. ஞானானந்தனும் அவருக்கு உறுதுணையாக விளங்கிய செல்வி. தி. கந்தப்பிள்ளை (திருமதி தி. இராசரத்தினம) அவர்களையும் கல்லூரியினர் என்றும் மறக்கமாட்டார்கள்.

கல்லூரியின் வளர்ச்சியின் பின்னணியில் அனுபவம் மிக்க ஆசிரியப் பெருந்தகையான திருமதி. அ. நாகரத்தினம் அவர்களும் ஓய்வுபெற்ற பின்னர், உயர்வகுப்பு ஆசிரியை செல்வி அ. இரத்தினம் அவர்களும் உபஅதிபர்களாகப் பதவி வகித்து ஒழுங்கையும் கட்டுப்பாட்டையும் கண்காணித்து வழிகாட்டியவர் ஆவார்கள். ஆசிரியைகளாகக் கடமை புரிந்ததுடன் குறிப்பாக அலுவலகத்திலும் தாம் மேற்கொண்ட பணியைத் திறம்படச் செய்து அதிபருடன் ஒத்துழைத்து உதவியதையும் நினைத்துப்பார்க்கவேண்டியுள்ளது. தொடர்ந்து செல்வி. வி. பாலசுப்பிரமணியம் அவர்கள் உபஅதிபராகப் போற்றும் வகையில் பணிபுரிந்தார்.

அதிபர் செல்வி பத்மா இராமநாதனின் புகழ் பூத்த பத்து ஆண்டு கால அதிபர்சேவைக்குப் பின் திருமதி. திவ்வியசிரோன்மணி நாகராஜா அவர்கள் அதிபராகப் பதவி ஏற்றுக் கல்லூரியின் உயர்நிலையைக் கட்டிக் காப்பதற்குத் தளராது சேவை ஆற்றியவர்.

போர்க்காலச் சூழ்நிலையிலும் பல நெருக்கடிகள் மத்தியிலும், பொறுமையுடன் நிதானமாகச் செயற்பட்டவர். கல்லூரி அகதி முகாமாக மாறவேண்டிய நிலைமை ஏற்பட்ட பொழுதும் கருணை மிக்கவராக சூழலிலுள்ள மக்களுக்கு கல்லூரி புகலிடமாக அமைய ஆவன செய்தார்.

பல்கலைக்கழகத்தில் பயின்று கொண்டிருந்த எங்கள் பழைய மாணவிகளும் சமூகமனப்பான்மையுடையவராக அகதிகளுக்கு உணவும் உடையும் சேகரித்துப் பகிர்ந்து அளித்துப் பரோபகார சிந்தனையுடன் உற்றுழி உதவியது என்றும் பெருமைக்குரியது.

*With Best Wishes For Sakthi 2003*

# BLOSSOM

## BRIDAL DRESSING & HAIR STYLING

**Eye Brow shaping Facials**

**(Herbal Product & Waxing)**

இந்து, கிறிஸ்தவ மணப்பெண் அலங்காரம், பரதநாட்டிய அரங்கேற்ற அலங்காரம், எல்லாவித வைபவங்களுக்கான தலை அலங்காரம், அதற்கான பூக்கள், முகஅலங்காரம், மணப்பெண் பூச்செண்டு (Bouquet) பூக்கூடைகள் (Flower Girl's Baskets) அழகான தலைச்சோடனைகள், தலைக்கு அணியும் Veil (Gold/White) Crown மற்றும் அனைத்தையும் பெற்றுக்கொள்ள...Blossom

***Skin care make up for all occasions***

தொடர்புகளுக்கு: **சுமி ஜெயன்** (Dip.in Sri Lanka)

**Tel: (416) 282-1717**

*With Best Wishes*

# HOPPER HUT

Tel: (416) 299-4311
Fax: (416) 299-7013
880 Ellesmere Rd.
Unit #215 - 217
Scarborough, Ont.
M1P 2W6

**A Taste of Sri Lankan & Indian Dine-in, Take Out & Catering Services**

OPEN 7 DAYS A WEEK

SUN. TO THURS. 10:30 AM TO 10:30 PM
FRI. TO SAT. 10:30 AM TO 11:00 PM



போட்டிகளிலும் வழமைபோல முன்னணியில் நின்ற அதே சமயம் பல்கலைக்கழகத் தெரிவிலும் முனன்னணியில் நின்றனர். லீயோ கழகம் Inter-Act Club என்று புதிய வெளிக்களவேலைகளும் அறிமுகமாகின.

அதிபரின் நிர்வாகத்திற்கு அருந்துணையாக கல்லூரிச் சுற்றாடலில் வாழ்ந்து கல்லூரியில் கற்ற மாணவிகளே ஆசிரியைகளாகிப் பதவி உயர்வு பெற்றுப் பகுதித் தலைவர்களாகவும் விசேட பணிபுரிந்தனர். பின்னர் திருமதி. ம. பரமநாதன் அவர்கள் பிரதி அதிபராகவும் திருமதி இ. சண்முகம் அவர்கள் உபஅதிபராகவும் பின் பிரதி அதிபராகவும் செல்வி. யோகேஸ்வரி கந்தையா அவர்கள் உப அதிபராகவும் பின் பிரதி அதிபராகவும் ஒத்துழைப்பு நல்கி தேரோட உதவும் அச்சாணி போல உதவியதையும் எண்ணிப் பார்க்கவேண்டியுள்ளது.

அதிபர் நாகராஜா அவர்களின் நிர்வாகத்தின் பொழுது கல்லூரியின் அரை நூற்றாண்டு கால வளர்ச்சியைக் குறிக்கும் பொருட்டு 1993ம் ஆண்டு கல்லூரிப் பொன்விழா கல்லூரி வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்படவேண்டியதாகின்றது. 7 தினங்கள் வரையில் பகல் வேளையில் கல்விக்கண்காட்சியும் மாலை வேளைகளில் திறந்த வெளி அரங்கில் மாணவரின் பல்வேறு கலைநிகழ்ச்சிகளும், பழைய மாணவிகள், பல்கலைக்கழக மாணவிகளின் படைப்புக்களும் இடம்பெற்றமை கண்கொள்ளாக் காட்சியே. பழைய மாணவர் சங்கச் செயலாளராக திருமதி. ம. பரமநாதன் அவர்கள் கல்விக் கண்காட்சி வெற்றியுடன் நிறைவடைய ஆற்றிய அரிய சேவை பாராட்டுக்குரியது.

அவ்வேளை கல்லூரியுடன் நெருங்கிய தொடர்புடையவர்களாக, பெற்றோா ஆசிரிய சங்கத்தினரும் கல்லூரி அபிவிருத்திச் சபையினரும் கல்லூரித்தாய்க்கு உவந்து அளித்த சேவை அனைத்தும் காலம் காலமாகப் பாராட்டப்படவேண்டியவையே. மாணவரின் பெற்றோரும் சிலர் பல்கலைக்கழகத்தில் உயர் பதவி வகித்திருந்த காரணத்தால் தருணத்தில் தகுந்த உதவிபெற முடிந்தது.

தொடர்ந்து கல்லூரியைக் கையேற்றவர் இன்றைய அதிபர் திருமதி. சரஸ்வதி ஜெயராஜா அவர்களே. அவருடைய நிர்வாகத்தின் பொழுது, 1995ம் ஆண்டு ஒக்ரோபர் வரை கற்றலும் கற்பித்தலும் திருப்திகரமாக நடைபெற்றது. எனிலும் நாட்டில் குழப்பமான சூழ்நிலை காரணமாக இடப்பெயர்வு ஏற்பட்ட சமயம், யாழ்நகரை விட்டுச் சாவகச்சேரிக்குச் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டது.

கல்லூரியைத் தொடர்ந்து நடத்துவதற்கு பிரதி அதிபர் திருமதி.ம. பரமநாதனின் ஒத்துழைப்பும் ஆசிரியைகளின் உதவியும் கிடைத்தது. கல்விப் பணியும் தொடர்ந்தது. மீள வந்த பொழுது கல்லூரி உடைக்கப்பட்டு பெறுமதியுள்ள பொருட்களும் களவாடப்பட்டும் கலக்க நிலையை அடைந்தவேளை இராணுவத்தினர் கல்லூரியை முகாமிட்டனர். அதிபரின் முயற்சியினால் மீண்டும் கல்லூரி சுமுகமாக இயங்கத் தொடங்கியது. 2156 மாணவிகள் 75 ஆசிரியைகளுமாக இருந்த நிலமை மாறி எண்ணிக்கையில் வீழ்ச்சி அடைந்தது. எனினும் போட்டிகளில் மாணவர்கள் வெற்றி பெற்றமை வியக்கத்தக்கதே. மருத்துவம் பொறியியல் விஞ்ஞானம் ஆகிய சகல துறைகளுக்கும் பல்கலைக்கழகத்திற்கு தெரிவாகித் திறமை பறைசாற்றப்பட்டது.

தற்சமயம் சமாதானக்காற்று வீசத் தொடங்கியதும் கல்லூரிக்கும் மாணவிகளுக்கும் மறுவாழ்வு மலர்ந்துள்ளது. 6ம் வகுப்புத் தொடக்கம் உயர்தர வகுப்புவரை மாணவர்களுக்குத் தகவல் தொழில்நுட்பக் கல்வியும் கணனிக் கற்கை நெறிகளும் செயல்முறைப்படுத்தப்பட்டுள்ளது. இதனால் நல்லதொரு எதிர்காலம் உதயமாகியுள்ளது என்பது கண்கூடு.

கல்லூரிக்கு ஈமெயில் வசதியும் இன்ரனெற்வசதியும் கிடைத்துள்ளமை ஒரு வரப்பிரசாதமே. கற்றகல்லூரியின் உயர்வைக் கருத்திற்கொண்டு பழைய மாணவிகள் சங்கங்களும் காலம் தோறும் அன்புக் காணிக்கைகளைச் செலுத்திவருகின்றது. விசேடமாகக் குறிப்பிடுவதானால் கொழும்புக் கிளைப் பழைய மாணவிகள் சங்கமும், அவுஸ்திரேலியாக் கிளையினரும் அடுத்து கனடாக்கிளையினரும் இறுதியாக ஐக்கிய இராட்சியக் கிளையினரும் கல்லூரி நவீன வசதியுடன் கூடிய ஒரு உயர்ந்த நிலையை அடையவும் மாணவர் சகல துறைகளிலும் நிபுணத்துவம் அடைந்து

*With Best Compliments From*

# LIONERS VIDEO VISION

***Rental Movies & Gift Items***

**Contact:**
**Nesan**

**Tel: 416-291-9488**
**Cell: 416-728-6925**

**Gift Items**
**Video, Audio, CD's, Video CD**
**SALES & RENTALS**
**VIdeo Transfers**
**Pal <> Secam <> NTSE**
**TV, VCR Repairs**

2950 Kennedy Road, Unit #6 Scarborough, Ont. M1V 1T1



## ஹோமியோபதி வைத்தியம்

நாட்பட்ட தலையிடி, அல்சர், ஆர்த்தரைட்டீஸ், தோல்வியாதிகள், கை, கால் அசதி கர்ப்பப்பைக் கட்டிகள், குழந்தை இல்லாதவர்கள் வலியுடன் கூடிய மாதவிடாய், வெள்ளைபடுதல், குரல்குறைதல், ஞாபகமறதி போன்றவற்றிற்கு ஹோமியோபதி சிகிச்சை மூலம் நிவாரணம் பெற வாய்ப்புண்டு.
40 வருடங்களுக்கு மேலாக ஹோமியோபதி சிகிச்சையில் அனுபவம் பெற்றவர்.

Baba Homeopathy Clinic
Dr.M.V.Thilaichandran
R.H.M.P. Srilanka
H.D. Canada

Tel: 416 264 5073, 613 523 5849

சாதனைகள் புரியவும் கைகொடுத்துள்ளன.

இன்றைய அதிபரின் நிர்வாகத்தின்கீழ் கல்லூரி தன்னிறைவு பெற்று உயரிய மேல்மாடிகளைக் கொண்ட மண்டபங்கள் சூழ, அழகுறக் காட்சி தருகின்றது என்ற நற்செய்தி மனநிறைவைத் தருகின்றது. பிரதி அதிபர் திருமதி வேதநாயகி பேரின்பநாதன் உபஅதிபர் திருமதி மீனலோஜினி செல்லையா அவர்களினதும் ஆசிரியைகளுடைய ஊக்குவிப்புடனும் உதவியுடனும் மாணவிகள் உயர்நிலை அடைவார்கள் என்பது உறுதி.

இதுவரை காலமும் ஆர்வத்துடன் சேவையாற்றி மாணவரின் அறிவுக் கண்ணுக்கு ஒளியூட்டிய ஆசிரியப் பெருந்தகைகளின் ஊக்கமும் உழைப்புமே கல்வி உயர்வுக்கு அத்திவாரமாயிற்று. மாணவருலகம் என்றுமே மறக்கமுடியாத சேவை இது. கல்லூரி வளர்த்தெடுத்த நூற்றுக்கணக்கான தன் மாணவிகளை அவையத்து முந்தி இருக்கச் செய்து கண்ணியமான குருசீட பரம்பரையை உருவாக்கிய பெருமிதத்துடன் என்றும் போல் இன்றும் தலைநிமிர்ந்து நிற்கின்றது எங்கள் கல்லூரி.

பல்கலைக்கழகத்தில் விஞ்ஞானம், கலை, கணிதம், வர்த்தகம், புவியியல், ஆகிய பல்வேறு துறைகளில் பட்டதாரிகளாக, பல்கலைக்கழக விரிவுரையாளர்களாக, பல்வைத்திய நிபுணர்களாக, வைத்திய கலாநிதிகளாக பொறியியலாளர்களாக, நிர்வாகத்துறையிலும் ஆளுமை மிக்க அதிபர்களாக, உதவிக் கல்விப் பணிப்பாளர்களாக உயர்பதவி வகிப்பதைக் கண்டு கல்லூரித்தாய் தன் இலட்சியப் பாதையில் வெற்றி வாகை சூடியிருக்கின்றாள். அன்று தொடக்கம் இன்றுவரை மாணவிகள் பல சாதனைகள் புரியக் கண்டு உவகையடைந்து அறுபது வயதிலும் அழகுறு மங்கையாக மணிவிழாக் கோலம் பூணுவது அறிந்து அன்னையின் மகளிர் நாம் ஆனந்தமடைந்து உள்ளமது பூரிக்கின்றோம். ஆனைமுகனின் இன்னருளுடன் எதிர்காலத்திலும் பல்வேறு துறைகளிலும் கல்லூரி தடம் பதிக்கும் என்ற நம்பிக்கையே இதயத்தில் துளிர்க்கின்றது

வாழ்க! எம் கல்லூரி! வளர்க எம் சங்கங்கள்

**திருமதி ஞா. சொக்கலிங்கம்**
**கல்லூரிப் பழைய மாணவி**
**முன்னாள் ஆசிரியை**
முன்னாள் கனடாச் சங்கத்தின் தலைவர்

18 SEP 2013

மணிவிழா காணும் எங்கள் கல்லூரித்தாய்க்கு வாழ்த்துக்கள்



**பாலவிமலா நர்த்தனாலயம்**

*திருமதி: சித்திரா தர்மா*

**(DIPLOMA IN DANCE** (BHARATHANATYAM))

1480 BRITTANIA ROAD WEST, UNIT-68
(BRITTANNIA & CREDITVIEW)

****TEL (905) 826-9306****

#40, JINNAH COURT,
VICTORIA PARK & O'CONNOR
(NEAR THE EGLINTON SQUARE MALL)

****TEL (416) 751-6431****

*With Best Wishes From*

**சாமி அன் சன்ஸ்**

**SAMY & SONS**

**WHOLESALERS & RETAILERS**

- ❖ புத்தம் புதிய டிசைன்களில் வெளியூர்களில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட நவநாகரீக மங்கையர், ஆடவர், சிறுவர் சிறுமியர்க்குரிய சகலவிதமான உடுப்பு வகைகளையும்
- ❖ தரமான 22K தங்க நகைகள்
- ❖ தரமான CD மற்றும் ஓடியோ, கசற்றுக்கள் விற்பனைக்கும் வாடகைக்கும் பெற்றுக்கொள்ளலாம்
- ❖ இலங்கை, இந்திய, சிங்கப்பூா மற்றும் ஐயிரோப்பிய நாடுகளுக்கான துரித பணமாற்றுச் சேவை
- ❖ கதிரைகள், தலைப்பாகை, சோடனை நகைகள் வாடகைக்கு எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்
- ❖ அன்பளிப்புப் பொருட்கள், விளையாட்டுப் பொருட்கள்
- ❖ சிறுவர் தமிழ் வகுப்புகள், நடன சங்கீத வகுப்புகள் நடத்தப்படுகின்றன
- ❖ இல்லத்தை அழகுபடுத்த பூச்செடிகள் எல்லாவற்றிற்கும் நாடவேண்டிய இடம்

1884 B Kennedy Road
(At Ellesmere)
Scarborough, Ont.

**Tel: (416) 298-1598**
**Fax: (416) 298-2849**

# அண்மைக்கால தகவல்கள்

கல்லூரியில் பொது விஞ்ஞானகூடம் ஒன்றும் அமைக்கப்பட்டுத் தளபாடங்களும் செய்யப்பட்டன. கல்லூரியில் கணனிப் பிரிவு அமைக்கப்பட்டு தகவல் தொழில் நுட்பக் கல்வி 6ம் வகுப்பிலிருந்தே மாணவர்களுக்குப் போதிக்கப்படுகின்றது. நவீன வசதிகளுடனான புதிய நூலகமொன்றும், ஒலி, ஒளி, அறையும் அமைக்கப்பட்டு மாணவர்களுக்குப் பயன்பட்டு வருவது மகிழ்ச்சியான விடயமாகும். கல்லூரியின் கட்டிடங்கள் யாவும் திருத்தியமைக்கப்பட்டு வர்ணம் தீட்டப்பட்டுக் கம்பீரமாகக் காட்சியளிக்கின்றது.

கனடாவிலுள்ள பழைய மாணவர் சங்கத்தினர் Photo Copy Machine ஒன்றினை வழங்கியுள்ளனர். அவுஸ்திரேலியாச் சங்கத்தினர் பரிசில் நிதியத்தில் ஒரு தொகைப்பணத்தினை வைப்புச் செய்துள்ளனர். கொழும்புச் சங்கத்தினர் தேவைகளை உடனுக்குடன் பூர்த்தி செய்து வருகின்றனர். அரசாங்கத்தின் உதவியுடனும் பல வழிகளிலும் கல்லூரி வளர்ச்சியடைந்து வருகின்றது. மருத்துவம், பொறியியல், சட்டம், விஞ்ஞானம், கலை ஆகிய பிரிவுகளில் மாணவிகள் பல்கலைக்கழகம் சென்று உயர்கல்வி கற்கின்றனர். பரீட்சைப் பெறுபேறுகள் உயர்ந்துகொண்டு வருகின்றன.

**அதிபர்**

**யாழ் இந்துமகளிர் கல்லூரி**

# பாராட்டுகின்றோம்

## யாழ். இந்து மகளிர் மாணவிக்கு முதல் பரிசாக ஒருலட்சம் ரூபா



தமிழ் தொலைக்காட்சி இணையம் ரி. ரி. என். க்காக சுவிசிலாந்து சிகரம் நிறுவன ஆதரவில் டிஜிற்றல் மீடியா இணைய நிறுவனம் யாழ்ப்பாணத்தில் நடத்திய அறிவுச் செல்வம் - 2002 போட்டியில் யாழ் இந்து மகளிர் கல்லூரி மாணவி ராதிகா முருகையா முதலாம் பரிசான ரூபா ஒரு இலட்சத்தை வென்றார்.

யாழ். பாடசாலைகளைச் சேர்ந்த ஜீ. சீ. ஈ உயர்தரப் பரீட்சைக்கு 2004ஆம் ஆண்டு தோற்றவுள்ள மாணவர்களிடையே நடத்திய இப்போட்டியின் இறுதிச் சுற்று 2002 நவம்பர் 15 யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெற்றது. இப்போட்டியில் 208 மாணவர்கள் பங்கேற்றிருந்தனர். இதிலேயே யாழ். இந்து மகளிர் மாணவி முதல் பரிசைத் தட்டிச் சென்றார்.

யாழ் இந்து மகளிர் கல்லூரி பழைய மாணவிகள் சங்கம்

கனடா

# என் கல்லூரித்தாய்க்கு வாழ்த்துக்கள்
# சக்தி சங்கீத நுண்கலைக்கழகம்



சங்கீத வித்துவான், இசைக்கலைமாமணி, பண்ணிசைமாமணி, சங்கீத கலாவித்தகர் திருமதி. பராசக்தி வினாயக தேவராசா அவர்களால் **சங்கீத, தேவார** வகுப்புகள் நடாத்தப்படுகின்றன.

மேலதிக தொடர்புகளுக்கு: 416-267-0114
Markham & Eglinton
Pharmacy & Finch
Markham & Denison

Smt. Parasakthy Vinayagar Thevarajah
For more information: 416-267-0114

# அம்மன்ஸ் நகை மாளிகை

எம்மிடம் அனைத்துரக 22 கரட் சிங்கப்பூர் நகைகளையும், உறுதியான கண்கவர் வேலைப்பாடுகளுடன் உங்கள் எண்ணம்போல் பலரக டிசைன்களில. உத்தரவாதத்துடன் குறித்த தவணையில் ஓடருக்குப் பெற்றுக் கொள்ளலாம்

1608 Gerrard Street East, Toronto, Ontario
**Tel: (416) 461-6217**

# அம்மன் சில்க்

* கூறைச் சேலை
* பனாரஸ்
* ரங்கோலி
* கோலம்
* கொப்பர்
* காயத்திரி
* ஆர்ட் சில்க்
* சுரிதர்

1608 Gerrard Street East, Toronto, Ontario
**Tel: (416) 461-6217**
**Fax: (416) 461-2697**

சக்தி 2003 க்கு வாழ்த்துக்கள்

**ABBIRAMI** *Catering*

**அபிராமி கேற்றறிங்**



2619 EGLINTON AVENUE EAST, SCARBOROUGH, ON.

**416-266-5372**

மணிவிழா காணும் கல்லூரித்தாய்க்கு என் ஆசிகள்

*Asha's* **LUXMY**

**FAST FOOD & TAKEOUT**

*Real Taste to Enjoy*

**Tel: 416-288-8177**

**1849 Lawrence Ave. East. (Lawrence & Pharmacy)**
**Scarborough, ON M1R 2Y3**

# அற்புத நர்த்தனாலயம்
## Atputha Narthanalayam
## Dance Academy

பரதகலாவித்தகர், நுண்கலைச் சிறப்புக் கலைமாமணி, (B.A Honrs in Fine Arts) நாட்டியக் கலாஜோதி (Dip. in Dance - London) **திருமதி அற்புதராணி கிருபராஜ்** அவர்களினால் நடன வகுப்புக்கள் நடத்தப்படுகின்றன.

✷ யாழ்பாண திருநெல்வேலி பல்கலைக்கழகத்தில் நுண்கலைப்பாடத்தில் முதன்மைச் சித்தி பெற்று கலைமாணிப் பட்டம் பெற்றவர்
✷ வட இலங்கை சங்கீத சபையினரால் ஆறாந்தர(ஆசிரியர்தரம்) நடனப் பரீட்சையில் முதன்மைச் சித்தி பெற்றமையினால் அவர்களினால் அரங்கேற்றம் கண்டவர்
✷ பரத கலா வித்தகர் என்னும் பட்டம் பெற்றவர்
✷ யாழ் மகளிர் கல்லூரி (சாவகச்சேரி) நடன ஆசிரியர்
✷ சாவகச்சேரி திலகநர்த்தனாலயத்தின் சிறந்த மாணவி
✷ அனைத்து இலங்கை நடனப் போட்டிகளில் முதல் இடம் பெற்றவர்
✷ 'கானல்வரி' என்னும் நாட்டிய நாடகத்தினை எழுதி, நெறியாள்கை செய்து, வடிவமைத்து நுண்கலைப்பீடத்திற்கு பெருமை சேர்த்தவர்
✷ அறிமுறை ரீதியாகவும், செய்முறை ரீதியாகவும மாணவர்களை பரீட்சைக்கு தயார் செய்பவர்

தொடர்புகளுக்கு: 82 Carol Breen Son, (Midland & Finch) Scarborough, Ontario.

**Tel: 416-609-2361**





# கோகுலம்
## Gogulam

உங்கள் விருப்பத்திற்கேற்பவும் தேவைக்கேறபவும்

✶ மிருதங்கம்
✶ தபேலா
✶ கஞ்சிரா
✶ வீணை
✶ வயலின்
✶ தம்புரா
✶ சலங்கைகள்

அத்துடன் பொய்க்கால் குதிரை, காவடி, கரகம், முடிவகைகள், மற்றும் நாட்டிய நாடக உடைகள் மற்றும் பல பொருட்களும் உங்கள் தேவைக்கேற்ப வாடகைக்குப் பெற்றுக்கொள்ளலாம்

மற்றும் அனைத்து இந்திய இசைக்கருவிகளும் பரதநாட்டிய உடைகள் இந்திய விற்பன்னர்களால் தைத்துக் கொடுக்கப்படும். பரதநாட்டிய அணிகலன்கள் மற்றும் பரதநாட்டியத்திற்கு தேவையான சகல பொருட்களும் கலைநயத்துடன் கூடிய அன்பளிப்புப் பொருட்களும் சிறுவர் சிறுமியா பெரியவர்களுக்கான ஆடைகளும், காஞ்சிபுரம் பட்டுப்புடவையும் பெற்றுக்கொள்ளலாம்

2654 Eglinton Ave. E (Brimley&Eglinton)
Scarborough (East Town Plaza)
**Tel: 416-265-2093**

*With Best Wishes For Sakthi 2003*



**Are you tired of paying RENT?**
**I can convert Rent into a Mortgage!!**
**Call me and find out how!!!**

வீடு வாங்க, விற்க அல்லது இவை சம்பந்தமான
சகல ஆலோசனைகளுக்கும் நீங்கள்
நம்பிக்கையுடன் நாடவேண்டியவர்
**ஜெசீதா**

**Jeseetha Mani,** B.Com.
Associate Broker
*Platinum Award Winner*
2001, 2002

Sutton GROUP
sutton group-commitment realty ltd.
AN INDEPENDANT MEMBER BROKER

45 Woodbine Downs Blvd.
Toronto, ON. M9W 6N5

**Tel: 416-746-9494**
24 HR. PAGER

*With Best Compliments From*

# AKASH

**SPECIALIZING IN SRI LANKAN & EAST INDIAN CUISINE**

*Catering & Takeout*

வெள்ளிக்கிழமை
10பதார்த்தங்களுடன்
மரக்கறி சாப்பாடு
விசேட விலைகள்



நண்பர்களுடன் கொண்டாடுவதற்கு
20பேர் கொண்ட சபைக்கு
போதுமான ஆறு வகை
பக்கேஜ்களை
**AKASH Catering**
அறிமுகப்படுத்துகின்றனர்

**2116 BRIDLETOWNE CIRCLE**
**SCARBOROUGH, ONT. M1W 2L1**

**TEL: (416) 490-9801**

# நன்றி நவிலல்

எங்கள் இந்து மகளிர் கல்லூரியின் மணிவிழாவினையொட்டி இடம்பெற்ற கலைவிழா சக்தி-2003 க்கும், மலர்வெளியீட்டிற்கும் மனமுவந்து உதவிய விளம்பரதாரர்களுக்கும், கலைஞர்களுக்கும், மலரினை வடிவமைத்துத் தந்த *R.G.Printing Inc.* நிறுவனத்தினருக்கும், அனுமதிச் சீட்டை அழகுற அச்சிட்டுத்தந்த Print Fast நிறுவனத்தினருக்கும், மற்றும் இவ்விழாவுக்கு வருகை தந்து சிறப்பித்த அன்பு நெஞ்சங்களுக்கும் எங்கள் இதயங் கனிந்த நன்றிகளும் வணக்கங்களும் உரித்தாகட்டும்.

" காலத்தாற் செய்த உதவி ஞாலத்திலும்
சாலப் பெரிது"

***யாழ் இந்துமகளிர்***
***பழைய மாணவிகள் சங்கம்***
***கனடா***

*With Best Wishes From*

"அன்பும் சிவமும் ஒன்றே - அன்னையும் பிதாவும் நன்றே"

# டாக்டர். குமாரசாமி கிருபானந்தன்

பிரசவ வைத்தியர் மற்றும் மகளிர் நோய்ப் பிரிவு சத்திர சிகிச்சை நிபுணர்

பெண்கள் மருத்துவம் சம்பந்தமான பிரச்சினைகளைத் தமிழில் உரை யாடித் தகுந்த ஆலோசனைகள் மற்றும்சிகிச்சைகள் பெறலாம்

***Full time practice in Obstetrics and Gynaecology at the Finch - Midland Medical Centre***

**SPECIAL INTERESTS INCLUDE:**

- **Obstetrical problems**
- **General Gynaecology**
- **Colposcopy**

**Appointments by referral**

***Scarborough General Hospital*** *ஸ்காபரோ பிரதம வைத்தியசாலை யிலும் இவரது சேவைகளைப் பெற்றுக் கொள்ளலாம்*

# DR. COOMAR KIRUPA

**F.R.C.S. (Canada) MRCOG (U.K)**

**Obstetrician & Gynaecologist**

## FINCH - MIDLAND MEDICAL CENTRE

**4190 FINCH AVENUE EAST, SUIT 316**

**SCARBOROUGH, ONTARIO M1S 4T7**

**TEL: (416) 609 - 1199**

விழாக் காணும் மாண்புறு கல்லூரிக்குப் பழைய மாணவியின் வாழ்த்துக்கள்